குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க ஆண்டு ஐப்பசித் திங்கள் 10—11—67 [இதழ் 12

தருமையாதீன மடாலயத்தில்;



தமிழக அரசு கல்வி, தொழில். அறநிலைய அமைச்சர்,

மாண்புமிகு, திரு. இரா. நெடுஞ்செழியன் M. A, அவர்கள்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 | 10-11-57 | இதழ் 12

உட்பொருள்

எண்		பக்கம்
1	பெறலரும் பரிசில்	... 649
2	திருக்குறளும் திருநாவுக்கரசரும்	... 656
3	சித்தாந்த வினாவிடை	... 666
4	திருத்தொண்டர் வரலாறு	... 671
5	சூரியன்	... 675
6	திருவள்ளுவர் விழா	... 681
7	செய்திகள்	... 689
8	எதிர்காலம்	... 694
9	Extract from the Visitor's Book	655, 670, 674, 679, 680

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

அரணங்கள் தாம்எரித்த
அத்தரே என்னுள்
கரணங்கள் ஓட்டும்வகை
காட்டீர் — கரணங்கள்
நீ அதுவாய் நில்லாமல்
நின்னறிவைக் கண்டருளிற்
போயதுவாய் நின்றுவிடப்
போம். (58)

ஆசிரியர் :-

வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர்:-

வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க - ஐப்பசி - 10—11—67 [இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

பெறலரும் பரிசில்

'ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப் பலரும் வருவர் பரிசிலாளர்' என்றபடி, ஓரிடத்தில் வள்ளல் ஒருவன் இருப்பானாயின், அவனிடத்தில் பல இடங்களி னின்றும் பரிசில் பெறுவோர் சென்று தம் கலைத்திறன் களைக் காட்டிப் பரிசில் பெற்றுச் செல்வர். அங்ஙனம் பரிசில் பெறுபவர்கள் புலவரும், பாணரும், கூத்தரும், விறலியரும், பொருநரும் ஆவர். அவருள், புலவர்கள் அரசர் முதலியோரை இயற்றமிழால் புகழ்ந்து பரிசில் பெறுவர். பாணர் தங்கள் யாழிசைத் திறத்தைக் காட்டி இசைத் தமிழால் புகழ்ந்து பரிசு பெறுவர். கூத்தரும்

விறலியரும் நாடகத் தமிழின்வழி கூத்தாடியும் நடனம் புரிந்தும் மகிழ்வித்துப் பரிசில் பெறுவர். பொருநர் ஏர்க்களம் பாடியும், போர்க்களம் பாடியும், பரணி பாடியும் வெற்றி கூறிப் பரிசில் பெறுவர்.

இவர்கள் இவ்வகையில் பரிசில் பெற்றுத் திரும்பிச் செல்லும் பொழுது, வழியில் தங்களைப்போலப் பரிசில் தருவாரை நாடி எதிர்வருகின்றவரைக் கண்டு, தங்களுக்குப் பரிசில் வழங்கிய வள்ளலின் சிறப்பையும், அவனது ஊர்வளம், அங்குச் செல்லுதற்கு உரிய வழி முதலியவற்றையும் கூறி அவனிடத்துச் செலுத்திப் போதலும் உண்டு. இந் நிகழ்ச்சியை அமைத்துப் புலவர்கள் பாடும் செய்யுள் 'ஆற்றுப் படை' எனப் பெயர் பெறும். ஆற்றுப்படை பரிசில் பெறுவாரது வகைபற்றி, 'புலவராற்றுப்படை' பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, விறலியாற்றுப்படை, பொருநராற்றுப்படை, என்ற பெயர்களால் குறிக்கப்படும். இவற்றுள் விறலியாற்றுப்படை தவிர ஏனைய எல்லா ஆற்றுப்படைகளும், 'பத்துப்பாட்டு' என்னும் சங்கத் தொகை நூலில் பெரிய அளவில் அமைந்துள்ளன. விறலி யாற்றுப்படையும், பிறவும் புறநானூற்றில் சிறிய அளவில் வந்துள்ளன.

ஆற்றுப்படைகள் பலவும் அரசர் முதலியோரைப் புகழ்ந்து பரிசில் பெறுவனவாய் அமைந்திருப்பினும், 'புலவராற்றுப்படை' என்பது ஒன்றுமட்டும் இறைவனை அடைந்து அவனது திருவருளைப் பெற்று விடுபெறும் வகையாகவே அமைந்துள்ளது. அஃது, 'இருங்கண் வானத்து இமையோருழைப் - பெரும்புலவனை ஆற்றுப்படுத் தன்று' என்ற வெண்பாமாலை இலக்கணத்தாலும், பிறவாற்றாலும் நன்கறியப்படும். ஆகவே, மக்கள் வகையினராகிய வள்ளல்களைப் பற்றியும் புலவராற்றுப்படையாகச் செய்யுள் செய்தல், சிறுபான்மையான மரூஉ வழக்கு எனப்படுகின்றது.

'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் - நற்றாள் தொழாஅர் எனின்' என்னும் பொதுமறையின்படி,

புலவர்கள், வாலறிவனது நல்ல திருவடிகளைத் தொழுது பிறப்பென்னும் பேதைமையின் நீங்கிச் சிறத்தலாகிய வீடு பேற்றினையே தாம் பெறும் பெரும்பரிசிலாக விரும்புவதன்றி, அரசர்முதலியோரால்தரப்படும் பொன்னும், மணியும், ஆடையும், அணிகலமும், களிறும், மாவும் போல்வனவற்றைப் பெரும்பரிசிலாக நினையார். ஏனைய பாணர், கூத்தர் முதலியோர்க்காயின், அவை பெரும்பரிசிலாய்த் தோன்றும். அதனால், புலவராற்றுப்படை இறைவனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுவருகின்றது. பத்துப்பாட்டுள் முருகாற்றுப்படை புலவராற்றுப்படையேயாம். அஃது அதன்கண், "அளியன் றானே முதுவாய் இரவலன்" என, இரவலனை, 'முதுவாய் இரவலன்' என்றதனானே பெறப்படும். புறநானூற்றின் நாற்பத்தெட்டாவது பாட்டாகிய புலவராற்றுப்படையுள், இரவலனை, "எம்முமுள்ளுமோ முதுவாய் இரவல" எனக் கூறினமையும், அதனுள், 'முதுவாய் இரவல' என்றதற்கு, 'முதிய வாய்மையை உடைய இரவல' என உரை கூறப்பட்டமையும் அறியத்தக்கன. இச் சிறப்புப் பற்றியே பத்துப்பாட்டுள் ஏனை எல்லாப்பாட்டிற்கும் முன்னாக முருகாற்றுப்படை வைக்கப்பட்டது.

முருகாற்றுப்படையினை அருளிச்செய்த நக்கீரதேவ நாயனார் தமக்கு முருகனிடத்துள்ள அன்பின் மிகுதியால் தம் பாட்டிற்கு, 'புலவராற்றுப்படை' என இரப்போரால் பெயர்கூற ஒருப்படாது 'முருகாற்றுப்படை' என ஈவோனால் பெயர் கூறினார், 'ஆற்றுப்படை' என்பது தடுமாறு தொழிலாய் நின்று, ஈவோனிடத்து ஆற்றுப்படுத்தல் எனவும் பொருள்தருதற்கு உரியது ஆகலின். 'ஆற்றுப்படை தடுமாறு தொழில் அன்று எனவும், 'முருகாற்றுப்படை புலவராற்றுப்படை அன்று எனவும் சாதிப்பர் நச்சினார்க்கினியர்.

பத்துப்பாட்டுள் முன்நிற்கும் முருகாற்றுப்படை, 'திருமுருகாற்றுப்படை' எனத் திரு என்னும் அடைமொழி கொடுத்துத் திருமுறையுள் சேர்த்து வழங்கப்பெற்ற பெருமையை யுடையது. இதன்கண் நக்கீரர் தாம் விரும்பும்

பரிசில் இது என்பதனை இறுதியில் குறித்துள்ளார். அது, "விளிவின்று - இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து - ஒருநீ யாகித் தோன்ற, விழுமிய - பெறலரும் பரிசில் நல்கும்" என்பது, இதன்கண், உலகத்தை, "இருள்நிற முந்நீர் வளைஇய உலகம்" என்றதனால், 'இவ்வுலகம், அறியாமை யாகிய இருளும், துன்பங்களாகிய அலைகளும் சூழ்ந்த உலகம்' என்பதைக் குறிப்பாற் கூறி, 'இதன்கண், நீ ஒருவனே யாவரும் வியக்கும்வண்ணம் அவற்றினின்றும் நீங்கி, அறிவும், இன்பமும் பெற்று அழிவின்றி எக்காலத்திலும் ஒரு தன்மையையாய் விளங்குமாறு, பெறுதற்கரிய பரிசிலாகிய தனது திருவடிகளை முருகன் உனக்கு வழங்குவன்' என உரைத்தார். பாட்டினுள் இஃது இரவலன் விரும்பும் பரிசில்போலக் கூறப்படினும், உண்மையில் இது நக்கீரர் விரும்பும் பரிசிலே என்பது வெளிப்படை.

> *"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி*
> *மாசறு காட்சி யவர்க்கு"*

எனவும்,

> *"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
> *பேரா இயற்கை தரும்"*

எனவும் போந்த பொதுமறைகளின்படி அறியாமையின் நீங்கி மெய்யுணர்வை அடைந்தோர் வீடு பெறுதலும், வீடு பெற்றோர் மாற்றம் யாதும் இன்றி என்ஞான்றும் ஒரு பெற்றியராய் வாழ்தலும் உண்மை எனின், இதனின் மிக்க பேறும் வேறுண்டோ! இல்லை. அதனால்தான் நக்கீரர் இதனையே 'விழுமிய பரிசில்' எனவும் குறிப்பிடுகின்றார். இவ் விழுமிய பெறலரும் பரிசிலையே, 'பரமுத்தி' எனச் சாத்திரங்கள் கூறும். முருகனை அடைந்தோர் இப் பரமுத்தி நிலையை உடம்பு நீங்கிய பின்னரே பெறுவர் என்பதின்றி, இவ்வுலகத்திற்றானே பெற்று வாழ்வர் என்பதையே, "இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து ஒருநீயாகித் தோன்ற........நல்கும்" என்றார். இதுவும் ஒரு வியத்தகு பெருமையன்றோ! இப் பெறலரும் பரிசிலையே எளிதில்

ஈயவல்ல முருகன், இவ்வுலகத்திற்கு ஏற்ற பொன்னையும், பொருளையும், போகத்தையும் வேண்டின் ஈயமாட்டானோ! எளிதில் ஈவான். அதற்கு அவனை அன்பினால் வழிபடுதல் ஒன்றே வேண்டுவது.

“முருகொத் தீயே முன்னியது முடித்தலின்” என்ற புறநானூற்று வரி, முருகன் தான் முன்னியவற்றை (நினைத்தவற்றை) மட்டும் முடிப்பானல்லன்; தன் அடியார் நினைத்தவற்றையும் முடிப்பவனே யாவன் என்னும் பொருளையும் குறிப்பதேயாகும். அதனை முருகாற்றுப்படையுள்ளும், “இன்னே பெறுதி நீ முன்னிய வினையே” எனக் கூறக் காண்கின்றோம்.

இங்ஙனம் முருகனை வழிபட்டு எல்லா இன்பமும் எய்த வேண்டுவார்க்கு மிகச் சிறந்த நாட்களாய் அமைவன ஐப்பசி மாதத்து வளர்பிறைச் சஷ்டியை முன்னிட்ட ஆறு நாட்களாகும். அந்நாட்கள் முருகப்பெருமான் அசுரர்களாகிய இருட்குழாங்களை அழித்து, அவரது சிறையினின்றும் அமரர்களை மீட்டு விண்குடி ஏற்றிய விழுத்தகு நாட்களாகும். இந்நாட்களில் சிறந்த நோன்பினை மேற்கொண்டு, முருகன் அசுரரை அழித்து அமரருக்கு அருள் புரிந்த வரலாற்றைக் கூறும் நூலாகிய கந்தபுராணத்தை அன்புடன் ஓதுதல் மரபு. கந்த புராணத்தை அருளிச் செய்த கச்சியப்ப சிவாசாரியர் வடமொழி தென்மொழிகளில் வல்லுநர். கச்சிக் குமரகோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் முருகனது திருவருளை நேரே பெற்றவர். அவர், ‘காந்தம்’ என்னும் வடநூலை மொழிபெயர்த்துக் கூறினும், நக்கீரரது திருமுருகாற்றுப்படையின்கண் பேரார்வம் கொண்டிருந்தமை, அவரது கந்தபுராணத்துள் நன்கு வெளியாகின்றது.

முதற்கண் கந்தபுராணக் கடவுள் வாழ்த்திலே முருகனைத் திருமுருகாற்றுப்படையுட் கூறப்பட்ட ஆறுபடை வீடுகளையும் அம்முறையே சொல்லித் தனித்தனிப் பாடலால் துதிக்கின்றார். பின்னர்த் திருநகரப் படலத்துள் குமர கோட்டப் பெருமையைக் கூறுமிடத்து,

"மேவருங் கூடல் மேலை
வெற்பினில், அலைவாய் தன்னில்,
ஆவினன் குடியில், நல்ஏ
ரகந்தனில், தணிகை யாதிப்
பூவுல குள்ள வெற்பில்,
பொற்புறும் ஏனை வைப்பில்
கோவில்கொண் டருளி வைகும்
குமரகோட் டத்து மேயோன்"

எனக் கூறினர். இப் பாட்டு, திருமுருகாற்றுப்படையினை அடியொற்றிச் செல்லுதல் தெளிவு. புராணத்தின் இறுதியிலும்,

"பொய்யற்ற கீரன் முதலாம்
புலவோர் புகழ்ந்த
ஐயற் கௌாது சிறுசொல்லும்
ஒப்பாகும்; இப்பார்
செய்யுற்றவன் மால்உமை பூசைகொள்
தேவ தேவன்
வையத் தவர்செய் வழிபாடும்
மகிழு மன்றே"

என்கின்றார். கந்தபுராண பாராயணத்தின் பயனை அவர் முடிவில் கூறுமிடத்து,

"வற்ரு அருள்சேர் குமரன்வண்
காதை தன்னைச்
சொற்ருரும், ஆராய்ந் திடுவாரும்,
துகளு ருமே
கற்ருரும், கற்பான் முயல்வாரும்,
கசிந்து கேட்க
லுற்ருரும் விட்டுநெறிப்பாலின்
உறுவர் அன்றே"

எனத் திருமுருகாற்றுப் படையுட் குறித்த பேறலகும் பரிசிலையே பயனுகக் கூறுகின்ருர்.

பதினாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுட்களையுடைய இக் கந்தபுராணத்தைப் பாராயணம் செய்ய இயலாதவர்க்கு அத்துணைப் பொருளையும் சுருக்கி ஆயிரத்தைம்பது பாடல்களுக்குள்ளாகக் கந்தபுராணச் சுருக்கத்தை, தருமையாதீன முனிவராகிய ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் அருளிச் செய்துள்ளார். இவ் விரண்டனுள் யாதேனும் ஒன்றுடன், நக்கீரதேவர் அருளிச்செய்த திருமுருகாற்றுப் படையையும் ஓதி முருகன்பால் பெறலரும் பரிசில் பெறுதல் அன்பர்களது செய்கையாகும். அப்பேற்றினை அன்பர்கட்கு முருகன் வழங்கிய மகாசஷ்டித் திருநாள் அண்மையிலே வந்து சென்றமையின், அதனை என்றும் மறவாது அப்பெருமானை வழிபட்டு அனைவரும் இன்புறுவோமாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakateswaraswamy Devasthanam, Tirucadayur.

Myself and Sri Andi, Sub-magistrate Sirkali have, had the unique opportunity of visiting the famous shrine and we have had very comsortable dharsanam. The staff of the temple had been kind enough to take us around and explain the history and significance of this place. The temple is well maintained and neatly kept. It is therefore no surprise that this temple has won the rolling cup as it really deserves it. We wish to visit this place again to have the blessings of the Lord and the Godess.

(Sd.) x x x x
Sub-Magistrate,
Sirkali.

(Sd.) x x x x
Dt. Munsiff,
Sirkali.

குருபாதம்

திருக்குறளும் திருநாவுக்கரசரும்

குருவருள்

திருஞான சம்பந்தர் ஈராண்டு நிரம்பி, மூவாண்டு தொடங்கப் பெற்றபொழுதே சீகாழியில் பிரமதீர்த்தக்கரையில் திருத்தோணிப்பெருமான் பெரியபெருமாட்டியுடன் விடைமேல் எழுந்தருளிவந்து காட்சியளித்து ஞானப் பால் அளித்தருளப் பெற்று எல்லாக் கலைகளையும் அந்நொடியிலே ஓதாதுணர்ந்து, தாவில் தனிச் சிவஞான சம்பந்தராய் விளங்கியவர். அவருக்கு அந்தணர் பலரும் இருபிறப்பைச் சடங்கு காட்டி எய்துவிக்கும் முறைகள் எல்லாவற்றையும் செய்து, 'வருதிறத்தின் மறை நான்கும் தந்தோம்' என்று மந்திரங்களை மொழிந்த மறையோர் முன்னே அவர், சுருதி ஆயிரம் ஓதி, அங்கமான தொல்கலைகளையும் எடுத்தியம்பி,

> "செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
> அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே"

என்ற உண்மையையும் உரைத்தருளக் கேட்டு, அவர்கள் அதிசயித்து, அவரைத் தம் கண்முன்வரு தியானப் பொருள் என்று மதித்து வணங்கித் தாங்கள் முன் ஓதி யுணர்ந்த மறைகளில் உள்ள ஐயங்கள் எல்லாம் நீங்கித் தெளிவுபெற்று வாழ்ந்தார்கள். அவரது அருள் மொழியில் திருக்குறளாகிய பொது மறையின் பொருள்கள் பொலிவுபெற்று விளங்குதல் போலவே, திருநாவுக்கரசரது திருமொழியிலும் அவை விளங்குதல் காணலாம்.

திருநாவுக்கரசர், 'மருணீக்கியார்' என்னும் பிள்ளைமைப் பெயருடன், 'புலன் கொளுவ மனம் முகிழ்த்த சுருணீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்கி' 'தந்தையார் களிமகிழ்ச்சி தலைசிறக்கச் செழுங்கலையின் திறங்கள் எல்லாம் முந்தை முறைமையிற் பயின்றவர். பின்னர்த் தம் பொருளைக் கல்வியில் வல்ல நாவலர் பலர்க்கு நலம் பெருக வழங்கியவர். திருவருள்

பெற்றபின் பாவுற்றவர் செந்தமிழின் சொல் வளப் பதிகத் தொடை பாடிய பான்மையினுல், இறைவனுல், 'நாவுக்கரசு' என்று உலகேழினும் விளங்கும் நற்பெயரைப் பெற்றவர். அவரது அருள்மொழியில் பொதுமறையின் பொருள்கள் பொலிவு பெறுதல் இயற்கையே.

"ஆனத்து முன்னெழுத்தாய் நின்ருர் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான ஞரே"

என்ற திருத்தாண்டகப் பகுதியில், இறைவனை அப்பர் 'முன்னெழுத்தாய் நின்ருன்' என்றது, திருக்குறளில் 'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற உவமையின் பொருளையே குறிக்கின்றது.

திருவள்ளுவர், இறைவனை, 'மலர்மிசை ஏகினுன்' எனக் குறிப்பிட்ட நிலையே, அப்பர் திருவாக்கிலும், "புண்டரிகப் புதுமலர் ஆதனத்தார் போலும்.........அடியேனை ஆளுடைய அடிகள் தாமே", "எரியாய தாமரைமேல் இயங்கி ஞரும் இடைமருது மேவிய ஈசஞரே" எனக் காணப்படுகின்றது. இன்னும் இவ்வாறு வரும் அவர் அருள்மொழித் தொடர்கள் பல.

'மலர்' என்பது தாமரை மலரையே குறிக்கும் என்பது அனைவர்க்கும் உடன்பாடு. ஆயினும், 'அது, திருவள்ளுவரது திருக்குறளில் புறத்தில் காணப்படும் நீர்ப்பூவாகிய தாமரை மலரைக் குறியாது, அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தையே குறிக்கும்' என்ற பரிமேலழகர் உரை உண்மை உரையேயாம். ஏனெனில், புறத்திற் காணப்படும் தாமரை மலராகக் கூறின், 'மலர்மிசை ஏகினுன்' என்பது, பிரமன் அல்லது அருகன் முதலிய ஒரு சமயக் கடவுளையே சிறப்பாகக் குறிக்கும் ஆதலாலும், ஒருசமயக் கடவுளைச் சிறப்பாகக் குறித்துக் கூறுதல் திருவள்ளுவர் கருத்தன்று ஆதலாலும் என்க. இக்கருத்தைப் பரிமேலழகரே இக் குறள் உரையில் குறிப்பாகக் கூறிப் பிறர் உரையை மறுத்திருக்கின்ருர். எனவே, 'மலர் மிசை ஏகினுன்' என்னும் திருக்குறளில் உள்ள, 'மலர்' என்பது, அன்பால் நினைவாரது நெஞ்சத் தாமரையே ஆயிற்று. இதனை நாவுக்கரசர்,

" புந்தியாய்ப் புண்டரிகத் துள்ளாய் போற்றி "

" பொள்ளல்இக் காயந் தன்னுள்
புண்ட ரீகத் திருந்த
வள்ளல் "

என்பனபோலப் பல இடங்களில் இனிது விளங்க அருளிச்செய்கின்றார். இருதயத்தை ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவத்த்துவம் என்னும் தத்துவங்களே, கொடி முதல் பொகுட்டு வரை அமைந்த தாமரை மலராகப் பாவித்து, அதன்மேல் இறைவனை வைத்து வழிபடும் முறை சிவாகமங்களில் சொல்லப் பட்டுச் சிவபூசை செய்வோர் யாவராலும் அங்ஙனமே செய்யப் பட்டு வருதல் பலரும் அறிந்தது.

" வேண்டாமை வேண்டுவதும் இல்லான் தன்னை "

" மற்றொருந் தன்னொப்பார் இல்லா தானை "

என்னும் திருத்தாண்டகப் பகுதிகள், " வேண்டுதல் வேண் டாமை இலான் ", " தனக்குவமை யில்லாதான் " என்னும் *திருக்குறளையே நினைப்பித்து நிற்கின்றன.

" உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் " என்னும் திருக்குறளில் ஐம்பொறிகளை யானையாகக் கூறிய வாறே அப்பரும்,

" வருங்கை யானை மதகளி றஞ்சினைப்
பொருங்கை யானைகண் டீர்புக லூரரே "

என்று அருளிச்செய்கின்றார்.

'ஐம்புலன்களை அடக்குதல் வேண்டும்' என்பதைத் திருவள்ளுவர்,

" அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை ; விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு "

எனக் குறிப்பிடுகின்றார். இதனைச் சொல்லாத ஆசிரியர் எவரும் இல்லை. அவ்வாறே அப்பரும் இதனைப் பல இடங்களில் பல

வகையாக அருளிச்செய்கின்றார். ஆயினும், அவரது திருவாக்கில் ஒரு கருத்துச் சிறப்பாகக் காணப்படுகின்றது. அஃதாவது, "இல்லறத்தைத் துறந்தவர்கள் மட்டுமே ஐம்புலன்களை வென்றவர்கள் என்பதில்லை; இல்லறத்தில் இருந்துகொண்டே ஐம்புலன்களை வென்றிருத்தல் கூடும்' என்பது. அதனை விளக்குவது, "நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை" என்னும் திருத்தாண்டகப் பகுதி. திருவள்ளுவர்க்கும் இது கருத்து என்பது,

> "ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
> இந்திரனே சாலுங் கரி"

என்னும் திருக்குறளால் அறியலாம். எவ்வாறு எனின், அகலிகையோடு கூடிவாழ்ந்து, இந்திரனைச் சபித்து அவன் ஆற்றலை அழித்த கௌதமமுனிவரை அவர், "ஐந்தவித்தான்" எனக் குறிப்பிடுதலால் என்க. எனவே, இறைவனை அவர், "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்று அருளியதும், இறைவன் போகியாய் இருந்து உயிர்கட்குப் போகத்தை வழங்கிக்கொண்டே, யோகியாய் யோக முத்தி உதவுதல் பற்றியே என்பதும் தெளிவு. 'ஐந்து அழித்தான்' என்றாது, 'ஐந்து அவித்தான்' என்ற குறிப்பும் காணத்தக்கது. இவை யெல்லாம் பரிமேலழகர்க்கும் கருத்தேயாம்.

திருவள்ளுவர் இறைவனை அறங்கள் எல்லாவற்றையும் தனக்கு வடிவாக உடையவன் என்பது பற்றி 'அற ஆழி அந்தணன்' எனக் குறிப்பிடுதல்போலவே திருநாவுக்கரசரும் இறைவனை 'அறவன், நீதி' எனக் கூறுதல் காணலாம்.

> "அறவன் எம்பிரான் அன்பிலா லந்துறை
> மறவா தேதொழு தேத்தி வணங்குமே"

> "நீதியை, நிறைவை, மறை நான்குடன்
> ஓதியை, ஒருவர்க்கும் அறிவொண்ணாச்
> சோதியை, சுடர்ச் செம்பொனின் அம்பலத்
> தாதியை அடியேன்மறந் துய்வனோ"

> "நீதியாய், நிலனாகி, நெருப்பாய், நீராய்
> நிறைகாலாய், இவையிற்றின் நியமமாகி
> ....

ஆதியாய் அந்தமாய் நின்றான் தன்னை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே''

'எட்டுக் குணங்களை யுடையவன் இறைவன்' என்பதை,

''கோளில் பொறியிற் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

என்னும் திருக்குறளிற் காண்கின்றோம். இதனைத் திருநாவுக்கரசர் பல இடங்களில் எடுத்தியம்புகின்றார்.

''எட்டுக் கொலாம்அவர் ஈறில் பெருங்குணம்''

''எட்டு வான்குணத் தீசன் எம்மான்றனை''

''எண்குணத்தார் எண்ணு யிரவர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே''

என்பன முதலியவற்றைக் காண்க.

''கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
மயில்ஆலும் ஆரூரரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே''

என்னும் திருநாவுக்கரசர் தேவாரமும்,

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று''

என்ற திருவள்ளுவர் திருக்குறளும் ஒன்றாகவே இருத்தல் வெளிப்படை.

'மனத்துக்கண் மாசு இல்லாமையே அறம்; மனத்தில் மாசுடையவர்க்கு அறம் உண்டாகாது' என்பது திருவள்ளுவரது அழுத்தமான கொள்கை. அதனைத் திருநாவுக்கரசர் பல இடங்களில் எடுத்து வற்புறுத்துதலைக் காணலாம்.

''கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை''

" வஞ்சர் - சிந்தையுட் சேர்விலாதார் "

" கரவிலா மனத்த ராகிக் கைதொழு வார்கட் கென்றும்
இரவுநின் றெரிய தாடி இன்னருள் செய்யும் எந்தை "

" வஞ்சகர்க் கரியர்போலும் மருவினோர்க்கெளியர்போலும் "

" வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடார்
நஞ்ச நெஞ்சர்க் கருளும்நள் ளாறரே "

" உள்ளம் உள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ளம் உள்ளவ ருக்கருள் வான்அலன் "

" நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும்நீருங் கண்டு
நக்கு நிற்பன் அவர் தம்மை நாணியே "

மனம் மாசின்றித் தூய்மைபெற்று விளங்குவது வாய்மையாலேதான் என்பர் திருவள்ளுவர்.

" புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையாற் காணப் படும் "

இதனை அப்பர் பெருமான்,

" வாய்த்திலேன் அடிமை தன்னுள்
வாய்மையால் தூயேன் அல்லேன் "

என்று அருளிச்செய்கின்றார்.

" விலங்கொடு மக்கள் அனையர், இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் "

என்பது முதலாகக் கல்வியைத் திருவள்ளுவர் வற்புறுத்தும் இடங்கள் பல. கல்வி யில்லாதவரை, 'விலங்குகள்' என்று அவர் இதன்கண் குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசரும், கல்வியைச் சிறப்பித்தும், கல்லாமையை இழித்தும் கூறும் இடங்கள் பல.

" காத்திலேன் இரண்டும் மூன்றும்
கல்வியேல் இல்லை என்பால் "

" கற்றிலேன் கலைகள் ஞானம் கற்றவர் தங்களோடும்
உற்றிலேன் ஆதலாலே உணர்வுக்கும் சேய ஞானேன் "

" கற்றதேல் ஒன்றும் இல்லை "

" கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி "

" கல்வியைக் கரையிலாத காஞ்சிமா நகர் "

" கற்றூர்பயில் கடல்நாகைக் காரோணம் "

கல்வியாவது இலங்கு நூல்களைக் கற்கும் கல்வியே எனத் திருவள்ளுவர் கூறுவதை மேலே கண்டோம். இலங்குதல் - விளங்குதல். அஃதாவது ஞானத்தைத் தருதல். இக் கல்வியைக் கற்றவர் வீடு பெறுவர் என்பதை,

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

என்னும் திருக்குறளில் கூறியுள்ளார்.

கல்வியைப் போலக் கேள்வியும் இன்றியமையாதது என்பதற்கு, 'கேள்வி' என்ற ஓர் அதிகாரமும் திருவள்ளுவர் கூறுகின்றூர், அதனுள்,

" கேட்பினும் கேளாத் தகையவே, கேள்வியால்
தோட்கப் படாத செவி "

என்று, கேள்வியில்லாதாரைக் கடிந்துரைக்கின்றூர். திருநாவுக்கரசரும்,

" ஆளாகார் ஆளா னாரை அடைந்துய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார் ;
தோளாத சுரையோ தொழும்பர் செவி
வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே "

என அருளுகின்றார். இக் கல்வி கேள்விகளின் வழி உண்மையைச் சிந்தித்து உணரவேண்டும் என்பதையும் திருவள்ளுவர்,

" ஓர்த்துள்ளம் உள்ளது உணரின், ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு "

என்று குறிக்கின்றார். திருநாவுக்கரசரும் இதனை,

" ஓர்த்து உள்ளவாறு நோக்கி
உண்மையை உணராக் குண்டர்
வார்த்தையை மெய்யென் றெண்ணி
மயக்கில்வீழ்ந் தழுந்து வேனை "

என்று அருளிச்செய்கின்றார்.

கற்றுக் கேட்டுச் சிந்திப்பதால் 'நிலைத்த பொருள் இது; நிலையாத பொருள் இது' என்னும் பகுத்துணர்வு இனிது விளங்கும். நிலையாமையைத் திருவள்ளுவர் ஓர் அதிகாரமாகவே வைத்துக் கூறுகின்றார். அதில்,

" நெருநல் உளன் ஒருவன் ; இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு "

என்பது ஒன்று. நாவுக்கரசரும்,

" இன்று ளார்நாளை இல்லை யெனும்பொருள்
ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள் "

" இன்றுளேன் நாளை யில்லேன்
என்செய்வான் தோன்றி னேனே "

எனக் குறிப்பிடுகின்றார்.

நிலையாமையை உணர்ந்தவர்க்கு, யாக்கையும், செல்வமும் நிலையா என்பது தெளிவாய் விளங்குமாகலின், அவர்கள் தங்கள், உடம்பிலும், செல்வத்திலும் பற்றில்லாதவர்களாய், இரப்பவர் யாவர்க்கும் இல்லை என்னாது வாரிவழங்குவர். இந்நிலை இல்லாதவர்களே உள்ள பொருளை 'இல்லை' என மறைப்பர்.

ஈகையே எல்லாவற்றினும் உயர்ந்தது; இரத்தலே எல்லாவற்றினும் இழிந்தது என்பர் திருவள்ளுவர் முதலிய சான்றோர் பலரும்,

"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று"

என்பது புறநானூறு. திருநாவுக்கரசரும் இதனை,

"இரப்பவர் தங்கட்கு ஒன்றும்
கொடையிலேன்; கொள்வதே நான்;
கோவல்வீ ரட்ட னீரே"

என்றும்,

"இலம்பொல்லேன் இரப்பதே; ஈயமாட்டேன்;
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே"

என்றும் கூறுகின்றார். இன்னும், 'ஈகையைச் செய்பவரே இறைவன் திருக்குறிப்பின்வழி நிற்பவர்கள்; இல்லை என்று மறைக்கின்றவர்கள், அவனது திருக்குறிப்பிற்குமாறாக நடப்பவர்கள்; அதனால், இறைவன் ஈபவர்க்கு அருள்செய்து, இல்லை என்பவரைக் கடுமையாகத் தண்டிப்பான்' என்பதை,

"இரப்பவர்க்கு ஈய வைத்தார்;
ஈபவர்க்கு அருளும் வைத்தார்;
கரப்பவர் தங்கட் கெல்லாம்
கடுநர கங்கள் வைத்தார்"

என்னும் பகுதியால் அருளிச் செய்கின்றார்.

அறம், தவம், ஞானம் ஆகிய எல்லாவற்றிற்கும் பயன் பிறவிப் பெருங்கடலை நீந்தி முத்திக்கரையை அடைதல். 'அதனைத் தருவது இறைவன் திருவடியே, என்பதை,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்னும் திருக்குறளால் திருவள்ளுவர் இனிது விளங்க அருளியுள்ளார். இன்னும் அவர் கடவுள் வாழ்த்து அதிகாரத்துள்

வேலூர் தேவஸ்தானச் சார்பில் கட்டிவழங்கப்பெறும்;

அரசினர் உயர்பள்ளிப் பிரார்த்தனை மண்டபத்தைத் தமிழக அரசு மாண்புமிகு கல்வி, அறநிலைய அமைச்சர் அவர்கள் திறந்துவைத்தல்.

வேளூர் ஆலயத்தில் :

தமிழக அரசு, அறநிலைய அமைச்சர்,
மாண்புமிகு. திரு. இரா. நெடுஞ்செழியன் M. A. அவர்கள்.

இறைவனது திருவடியையே பல இடத்திலும் எடுத்துக் கூறியிருப்பதைப் பார்க்கின்றோம். திருநாவுக்கரசர் இறைவனது திருவடியின் பெருமைகளையே தனித்தெடுத்துக் கூறும் திருப்பதிகங்கள் பலவற்றை அருளிச் செய்துள்ளார். திருவையாற்றுத் திருவடித் திருவிருத்தம், திருஇன்னம்பர்த் திருவடித் திருவிருத்தம், திருவடித் திருத்தாண்டகம் என்பன அவை. அவற்றுள், திருவையாற்றுத் திருவடித் திருவிருத்தம் இருபது திருப்பாட்டுக்களையுடையது. இவைகளில் எல்லாம் இறைவனது திருவடியின் பெருமைகள் பலவாறாகப் பேசப்படுதல் காணலாம்.

" இருள் தரு துன்பப் படலம் மறைப்ப மெய்ஞ் ஞானம்என்னும்
பொருள் தரு கண் இழந் துண்பொருள் நாடிப் பொருள்இழந்த
குருடரும் தம்மைப் பரவக் கொடுநரகக் குழிநின்று
அருள்தரு கைகொடுத்து ஏற்றும் ஐயாறன் அடித்தலமே"

" துன்பக் கடலிடைத் தோணித் தொழில்பூண்ட தொண்டர் [தமை
இன்பக் கரைமுகந்து ஏற்றும் திறத்தன
....
ஐயாறன் அடித் தலமே"

" தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன இன்னம்ப ரான்றன் இணையடியே"

என்னும் பகுதிகள் சிறப்பாக இங்கு நோக்கத்தக்கன.

இன்னும், " உற்றார் இலாதார்க்கு உறுதுணையாவன .... அற்றார்க்கு அரும்பொருள் காண்க. ஐயாறன் அடித்தலமே" என்பன முதலாகவும் பலவற்றைக் கூறுகின்றார்.

"பரவுவார் பாவம் பறைக்கும் அடி"

" பணிபவர்க்குப் பாங்காக வல்ல அடி;
பற்றற்றார் பற்றும் பவளஅடி"

என்பன முதலாகத் திருவடித் திருத்தாண்டகத்தில் வருவன பல.

இவற்றால் எல்லாம் திருக்குறளின்வழித் திருநாவுக்கரசர் திருமொழியையும் மக்கள் ஓதியுணர்ந்து, திருநின்ற செம்மையைப் பெறுவார்களாக.

சித்தாந்த விளுவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 26, இதழ் 10, பக்கம் 585 இன் தொடர்ச்சி)

அசுத்த மாயா காரியம்

மாணுக்கன் : சுத்த மாயையின் காரியங்களை விளக்கியருளினீர்கள். அங்ஙனமே அசுத்த மாயையின் காரியங்களையும் விளக்கியருளவேண்டும்.

ஆசிரியர் : நல்லது! விளக்குவோம். 'சுத்தமாயையை இறைவன் தான் நேரே தொழிற்படுத்தி நிற்பான், என்பது, மேலே, அவன் ஞானசத்தி, கிரியா சத்திகளைச் செலுத்தி, 'இலயம், போகம், அதிகாரம்' என்னும் மூவகை நிலைகளில் நிற்பான் என்று கூறியதனுல் விளங்கும், இனி அசுத்த மாயையை இறைவன் தான் நேரே தொழிற்படுத்தாது, சுத்த வித்தையில் நிற்கும் வித்தியேசுரர் எண்மருள் முதல்வராகிய அனந்த தேவர் வழியாகவே தொழிற்படுத்துவன். ஆகவே, அசுத்த மாயைக்கு அதிகார மூர்த்தி அனந்த தேவர் என்பது விளங்கும்.

மாணுக்கன் : சுத்த மாயையைப்போல அசுத்த மாயையையும் இறைவன் தான் நேரே தொழிற்படுத்திஞல் என்னை ?

ஆசிரியர் : 'அசுத்தம், சுத்தம்' என்பன பிறபொருட் கலப்பும், கலப்பின்மையுமாம் என்பது முன்னே கூறப்பட்டது, ஆணவம், கன்மம் என்பவற்றேடு கலவாதது சுத்தமாயை. அவ்விரண்டனேடும் கலந்திருப்பது அசுத்தமாயை. கலப்பற்றிருத்தலால் சுத்த மாயை சூக்குமமாய் நுண்பொருளாய் உள்ளது. கலப்புற்றிருத்தலால் அசுத்தமாயை தூலமாய் (பருப்பொருளாய்) உள்ளது. இறைவன் நுண்ணியோன் ; அவனது சத்தியும் நுண்ணிது. ஆதலின், அவன் நுண்பொருளையே நேரே தொழிற்படுத்துவான் ; பருப்பொருளைப் பிறிதொரு பொருள் வாயிலாகவே தொழிற்படுத்துவான்.

இறைவன் தவிர ஏனை யாவரும் உயிர்வருக்கத்தினர். இறைவனை நோக்க உயிர்கள் தூலப்பொருள்கள் என்பது முன்னே பல இடங்களில் கூறப்பட்டது. அனந்த தேவர், ஒருமலம் உடைய விஞ்ஞான கலர் எனப்படும் வகையினருள் மலம் நீங்கி ஞானம் பெற்றுத் தூல அதிகாரமல வாசனை மாத்திரம் உடையவர். 'அதிகாரமலம்' என்பது, இறைவன்போலத் தாம் உலகத்திற்கு முதல்வராய்நின்று அதனை நடத்துதல் வேண்டும் என்னும் விருப்பத்திற்குக் காரணமாகிய ஆணவத்தின் சத்தி. அனந்த தேவர் முதலியோர்க்கு அவ்விருப்பம் இருப்பினும், அவர் இறைவனை மறந்து அவ்வதிகாரத்தில் மூழ்கிக் கிடவாமையால், அவர்க்கு அம்மலம் இன்றி, அதன் வாசனை மாத்திரமே உள்ளது என்க. இங்ஙனம் இவர் உயிர் வருக்கத்தினராய் மலவாசனை நீங்காது நிற்றலின், அசுத்தமாயையாகிய தூலப் பொருளை இறைவன் இவர் வழியாகத் தொழிற்படுத்துகின்றான் என்க.

இறைவன் இவ்வனந்த தேவர் வழியாக அசுத்தமாயையைக் காரியப்படுத்தத் திருவுளம் பற்றுதலால், இவருக்கு அதற்கேற்ற அறிவும், ஆற்றலும் உள்ளனவாகும். அவற்றால் இவர் பிரளயாகலர், சகலர் என்னும் இருவகை உயர்களின் வினை வகைகளை அறிந்து அவற்றிற்கேற்ப அசுத்த மாயையைக் காரியப் படுத்துவர்.

மாணுக்கள்: நன்று! அசுத்த மாயையை இறைவன் தானே தொழிற்படுத்தாது, அனந்த தேவர் வழியாகத் தொழிற் படுத்துதற்குக் காரணத்தை உணர்ந்தேன்; இனி, அனந்த தேவர் அசுத்த மாயையைக் காரியப்படுத்தும் முறையாது? உரைத்தருள வேண்டும்.

11 வித்தியா தத்துவம்

ஆசிரியர்: மல கன்மங்களோடு கலவாது தூய்மையாய் விரிந்து கிடக்கும், 'விந்து' எனப்படும் சுத்தமாயையினுள்ளே இருப்பது, மல கன்மங்களோடு கலந்து, 'மோகினி' எனப்படும் அசுத்தமாயை. மோகினி - மோகிக்க - மயங்கச் செய்வது. இத்தன்மை, இதற்கு, மல கன்மங்களின் சார்பால் உண்டாயது. இதினின்றும் தோன்றுவன ஏழு தத்துவங்கள். அவை, 'காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை' என்பன. இவைகளுள், 'மாயை' என்பது இறுதியாகச் சொல்லப்படினும் முதற்கண் அறியத்தக்கது அதுவே.

அசுத்த மாயையும் ஓரளவு விரிவுடையதே. இதனுள் ஒரு சிறு பகுதியை அனந்த தேவர் தமது ஆற்றலால் திரித்து, அசுத்த தத்துவங்களாய்ப் பரிணமித்தற்கு ஏற்புடையதாகச் செய்வார். அங்ஙனம் செய்யப்பட்ட பகுதியே, 'மாயை' என்னும் ஒரு தத்துவமாகும். இது, நிலவுருண்டை அளவிடப்படாத பெருமையுடையதாயினும், அதில் ஒரு சிறுபகுதியே வயல்களாகவும், குடம் முதலியவை தோன்றுதற்கு எடுத்துக்கொள்ளப்படும் மண்ணாகவும் அமைதல் போல்வதாம். 'சுத்த மாயையின் காரியங்கள் விருத்தி' எனவும். 'அசுத்த மாயையின் காரியங்கள் பரிணாமம்' எனவும், 'அந்தப் பரிணாமமும் முழுதுவதும் பரிணமிப்பதன்று; ஒருபுடை பரிணமிப்பதே' எனவும் முன்னர்க் கூறியவற்றை மறத்தல் கூடாது.

அசுத்த மாயையின் ஒருபுடைப் பரிணாமமாகிய மாயா தத்துவத்தினின்று முதற்கண் 'காலம்' என்னும் தத்துவம் தோன்றும். தோன்றுவது அனந்த தேவர் தோற்றுவிக்கவே என்பதை எவ்விடத்தும் மறத்தல் கூடாது.

கால தத்துவத்தின்பின், மேற்சொல்லிய மாயா தத்துவத்தினின்று 'நியதி' என்னும் தத்துவமும், நியதி தத்துவத்தின் பின்னர் 'கலை' என்னும் தத்துவமும் தோன்றும். 'மாயையினின்றும் இவை தோன்றும்' என்பதற்குக் கருத்து, மாயை என்னும் தத்துவம் அனந்த தேவர் இச்சையின் வழி முதற்கண் ஒரு பகுதி காலமாயும், பின்னர் மற்றொரு பகுதி நியதியாயும், பின்னர் வேறொரு பகுதி கலையாயும் பரிணமித்து நிற்கும் என்பதேயாம். ஒரு பகுதியே பரிணமிப்பது என்றதனால், மாயையினின்றும் காலம் முதலியவை தோன்றிய பின்பும் மாயை என்னும் தத்துவமும் உளதாயே நிற்கும் என்க. இனிக் கூறப்படும் தத்துவங்களையும் இவ்வாறே கொள்க.

காலம், நியதி, கலை என்னும் மூன்று தத்துவங்களும் முறையே மாயையிலிருந்தே தோன்றும். அதன்பின் கலையிலிருந்து 'வித்தை' என்னும் தத்துவமும், பின் வித்தையினின்றும், 'அராகம்' என்னும் தத்துவமும் தோன்றும். காலம் முதலாகச் சொல்லப்படுகின்ற தத்துவங்கள் அனைத்தும் உயிர்களுக்கு உடம்பாய் நின்று, பல வகையில் உதவிசெய்யும்.

1. காலம்

அவற்றுள் காலம், 'இறப்பு, நிகழ்வு, எதிர்வு' என மூன்றாகி நிற்கும். அவற்றுள் இறந்தகாலம் ஏனைக் காரணங்களோடு

இயைந்து ஆன்மாவின் ஞானம், கிரியை, இச்சை என்பவற்றை, வினை வினைப்பயன்களினின்றும் பிரிக்கும். நிகழ்காலம் அவ்வாற்றான் அம்மூன்றனையும் அவ்விரண்டனோடும் கூட்டும். எதிர்காலம் ஞானம் முதலிய மூன்றனையும், வினை வினைப்பயன்களை எதிர்நோக்கச் செய்யும்.

மாணாக்கன் : காலம் காட்சிக்கு வாராமையால், அதனை உண்டென்று கொள்வது எப்படி ?

ஆசிரியர் : மரங்களும், அவற்றிற்கு உணவாகின்ற பொருள்களும் எப்பொழுதும் ஒருங்கு கூடியே இருக்கவும், மரங்கள் இடையீடின்றி எப்பொழுதும் பூத்துக் காய்த்துப் பழுத்துப் பயனைத் தந்துக்கொண்டிராமல், ஒவ்வொரு காலத்தில் மட்டுமே பூத்துக் காய்த்துப் பழுத்துப் பயன் தருவதனாலும், விதைவகை பலவும் எல்லாம் எக்காலத்திலும் நிலத்தில் இட்டுப் பயிர் செய்தற்கு உரியனவாகாது, ஒவ்வொருவகை விதைகள் ஒவ்வொரு காலத்தில் மட்டுமே நிலத்தில் இட்டுப் பயிர் செய்தற்கு உரியனவாய் இருத்தலாலும், மற்றும் இன்னோரன்ன பலவற்றாலும், 'காலம் என்பது ஒன்று உண்டு' என்பது நன்கு விளங்குகின்றதன்றோ !

மாணாக்கன் : 'மரங்கள் பயன் தருதற்கும், விதைகள் பயிராவதற்கும் சூரியனது கதிமாற்றத்தால் உண்டாகும் வெப்ப தட்ப நிலைகளின் வேறுபாடே காரணம்' எனவும், அந்நிலைக்கு வேறாய்க் காலம் என்பது ஒன்று இல்லை' எனவும் கொண்டால் என்னை ?

ஆசிரியர் : வெப்ப தட்ப நிலைகள், மரங்கள் தம் பயனை மிகத்தருதல் அல்லது குறையத் தருதலுக்கும், விதைகள் செழிக்கப் பயிராதல் அல்லது மெலியப் பயிராதலுக்கும் காரணமாவனவே யன்றிப் பூத்துக் காத்துப் பயன் தருதற்கும், பயிராதற்கும் காரணமாவன அல்ல. எங்ஙனமெனின், வெப்ப தட்ப நிலைகள் மழையாலும், அஃது இன்மையாலும் மாறுபடுவன ஆதலின், காலமல்லாக் காலத்து மழை மிகப் பெய்யினும் அப்பொழுது பூத்தற்குரிய அல்லாத மரம் சிறிதும் பூவாமையானும், விளைதற்குரித்தல்லாத பயிர் சிறிதும் விளையாமையானும், அவை பூப்பதும், விளைவதுமாகிய காலத்தில், மழை இல்லாதொழியினும் சிறிதளவேனும் பூத்தலும், விளைதலும் கண்கூடாதலானும். என்க.

இன்னும், 'இவர் நெடிது வாழ்கின்றார்; அவர் கடிதின் மறைந்தார்; இவ் ஆடை நெடிது நிற்கின்றது; அவ் ஆடை கடிதிற் கிழிந்தது' என்றாற்போல் வனவற்றில், நெடிதும், குறிதுமாக அறியப்படும் பொருள் காலமன்றி வேறின்மையான், அங்ஙனம் நெடிதும், குறிதுமாக அனுபவமாய் அளக்கப்பட்டு நிற்கும் பொருளை இல்லை எனின் அது மாறுகோள் உரையாம். அன்றியும், 'ஒருவர் சென்றார்' எனின், 'எங்குச் சென்றார்' என்று அறிய அவா நிகழ்தல் போல, 'எப்பொழுது சென்றார்' என்று அறியவும் அவா நிகழ்கின்றது. அதனால், இன்ன இடத்திற் சென்றார்' எனக் கூறும்வழி அவ்விடம் உள்பொருளாதல் போல, 'இன்ன காலத்தில் சென்றார்' எனக் கூறும் காலமும் உள்பொருளே யாதலல்லது இல்பொருள் ஆமாறு இல்லை. இவ்வாற்றானும், பிறவாற்றானும், 'காலம்' என்பது ஒன்று உண்டு என்பது தெற்றென உணர்ந்துகொள்க.

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூவகைக் காலங்களும் தோன்றி நின்று அழியும் ஒவ்வொரு பொருளிலும் வேறு வேறு உள்ளன. எல்லாக் காலங்களும் உயிர்களின் வினைக்கேற்பச் செலுத்தும் இறைவனது சத்தியின் வழியே தம் தம் காரியத்தைச் செய்யும். எல்லாச் செயல்கட்கும் காலமே பற்றுக்கோடு. காலம் இல்லையேல், செயல் இல்லை.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Shiyali.

இன்று இத் திருத்தலத்தைத் தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. திருக்கோயில் சந்நிதிகளும் சுற்றுப்புறங்களும் மிகவும் சுத்தமாகவும் கடவுள் பக்தியை ஞாபகமூட்டும் வகையில் திருமுறைப் பாசுரங்கள் அழகாக எழுதப்பட்டிருக்கின்றன. புராண வரலாறுகளை விளக்குவதற்கு அங்கங்கே தீட்டப்பட்ட ஓவியங்கள் கவர்ச்சியுள்ளனவாக இருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் அருளாட்சியின்கீழ் கோயில் பூஜைகளும், நிர்வாகமும் சிறப்பாக நடைபெறுகின்றன. கோயில் சிப்பந்திகள் வரும் யாத்ரிகர்களிடம் அன்பாகவும், பணிவாகவும் நடப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி.

(Sd.) R. Ratinaswami,
3—10—1967. District Munsiff, Thiruvaiyaru.

திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல்
வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.

(மலர் 26, இதழ் 10, பக்கம் 566 இன் தொடர்ச்சி)

(7) அமர்நீதி நாயனார்

" அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன் "

— திருத்தொண்டத் தொகை

" மிண்டும் பொழிற்பழை யாறை அமர்நீதி வெண்பொடியின்
முண்டம் தரித்த பிராற்குநல் லூரின்முன் கோவணநேர்
கொண்டிங் கருளென்று தன்பெருஞ் செல்வமும் தன்னையுந்தன்
துண்ட மதிநுத லாளையு மீந்த தொழிலினனே. "

— திருத்தொண்டர் திருவந்தாதி

சோழநாட்டில் பழையாறை என்னும் தலத்தில் வணிகர் குலத்தில் அவதரித்தவர் அமர்நீதி நாயனர். இவர் பொன் மணி முத்து ஆடைகள் முதலிய வற்றைக் கொண்டு வாணிபம் செய்து அளவிலாச் செல்வம் ஈட்டி வாழ்ந்து வந்தார். எப் போதும் சிவபிரான் திருவடிகளையே சிந்திக்கும் இயல்பினர் இவர். சிவனடியார்களை அன்போடு வரவேற்றுத் திருவமுது செய்வித்து அடியார்கள் குறிப்பறிந்து போர்வை கீள்கோவணம் முதலியன அளித்து மகிழ்பவர்.

திருநல்லூரில் திருமடம் :-

திருநல்லூரில் நடைபெறும் திருவிழாவிற்கு வரும் சிவனடியார்கள் திருவமுது செய்தற்குத் திருமடம் ஒன்றை அமைத்தார். அத் திருமடத்தில் தம் உறவினர்களோடு தங்கியிருந்து திருவிழாவைத் தரிசித்தும் சிவனடியார்கட்கு அமுதளித்தல் முதலிய திருத்தொண்டு புரிந்துகொண்டும் வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் :-

பெருமான் அமர்நீதி நாயனாரின் அடியார் பக்தியை உலகிற்குணர்த்த அந்தணர் குலத்துப் பிரமசாரி வடிவம் தாங்கி தலையில் சிகையுடன் திருவெண்ணீறு அணிந்து, முப்புரிநூல் தரித்து, தருப்பையை அரைநாணாக முறுக்கிக் கட்டி, கோவணம் தரித்து, கையில் இரண்டு கோவணம் முடிந்த தண்டுடன் அமர்நீதி நாயனார் இல்லத்திற்கு எழுந்தருளினார். அமர்நீதியார் அந்தணரை வரவேற்று முகமன் கூறினார்.

அந்தணர் கோவணம் அளித்தல் :-

அமர்நீதியார் அந்தணரைத் தம் இல்லத்தில் திருவமுது செய்தருளுமாறு வேண்டிக் கொண்டார். அதற்கிசைந்த அந்தணப் பிரமசாரி நாயனாரை நோக்கி, 'நான் காவிரியாற்றுக்கு நீராடச் செல்கிறேன். ஒருவேளை மழைவரினும் வரலாம். ஆகையால் என்னுடைய பிறிதொரு கோவணத்தைப் பத்திரப்படுத்தி வைத்திரு. இக் கோவணத்தின் பெருமை கூறற்கரியது' என்று கூறி நாயனார் கையிலிருந்த தண்டில் கட்டியிருந்த இரண்டு கோவணங்களில் ஒன்றைக் கொடுத்து நீராடச் சென்றார். அதற்கு நாயனார் இசைந்து 'நீவிர் நீராடி விரைவில் இங்கு எழுந்தருளுக' என்று கூறி அவர் கொடுத்த கோவணத்தைத் தனியிடத்தில் பேணி வைத்து வந்தார்.

கோவணம் மறைதல் :-

காவிரியாடி மீண்டு வந்த அந்தணர் மழையில் நனைந்து கொண்டே நாயனார் வீட்டிற்கு வந்தார். வந்த அந்தணரை நாயனார் விருந்துண்ண எழுந்தருள்க என வேண்டினார். மழையில் நனைந்து வந்த அந்தணர் வடிவு கொண்ட இறைவன் நாயனாரின் அன்பு வெள்ளத்தில் நனைய விரும்பினார். நாயனாரை நோக்கி, அன்பரே! நாம் அணிந்துள்ள ஈரக் கோவணத்தை மாற்றவேண்டும்; என்னிடமுள்ள பிறிதொன்றும் மழையில் நனைந்துவிட்டது. நான் உன்னிடம் கொடுத்துச் சென்ற கோவணத்தைக் கொண்டு வருக எனக் கூறினார். அமர்நீதியார் அடியார் தன்னிடமளித்த கோவணத்தை எடுக்கச் சென்றவர் வைத்த இடத்தில் அதனைக் காணாது திகைத்தார். தேடினார்; யாண்டும் அதனைக் காணாது மயங்கி வேறொரு கோவணத்தை எடுத்துக்கொண்டு வந்து 'அடிகளே! தாங்கள் அளித்த

கோவணத்தை வைத்த இடத்தில் காணவில்லை. எவ்வாறு அது மறைந்தது என்றும் புரியவில்லை. அதற்கு மாருக இதோ நான் கொண்டுவந்திருப்பது தனியே கோவணமாகவே நெய்யப்பெற்றது. குற்றம் பொறுத்துத் தாங்கள் இதை அணிந்துகொள்ளல் வேண்டும்' என்று கூறினர்.

ஏற்க மறுத்தல் :-

அதைக் கேட்ட அந்தணர் சினந்து 'அமர்நீதியாரே! நீர் என் கோவணத்தை அபகரித்துக்கொண்டு அதற்குப் பதில் வேருென்றைத் தருவது சரியோ? நீர் அடியார்களுக்குக் கோவணம் அளித்து வருவதாகக் கூறுவது என் கோவணத்தைக் களவு செய்யத்தானே? நீர் செய்யும் வாணிபம் நன்று என்று கூறினர். அவ்வார்த்தைகளைக் கேட்ட அமர்நீதியார் மனம் வருந்தி மன்னிப்பு வேண்டி இதற்கு மாருக இக்கோவணமேயன்றி உயர்ந்த பட்டாடைகள் மணிகள் முதலியவற்றை ஏற்றருளுமாறு வேண்டினர்.

எடைக்கு எடை கோவணம் :-

பிரமசாரியாக வந்த அந்தணர் சினந்தணிந்து 'என்னுடைய கோவணத்தின் எடையளவுக்குரிய பிறிதொரு கோவணம் தந்தால் அதனைப் பெற்றுக்கொள்கிறேன்' என்று கூறினர். அவ்வார்த்தை கேட்ட அமர்நீதியார் முகம் மலர்ந்து எடைக்கு எடை எவ்வாறு தருதல் வேண்டுமென வேண்டிநின்ருர். அந்தணர் உடனே கைத்தண்டில் முடிந்திருந்த கோவணத்தை அளித்து 'இதன் எடையுள்ள பிறிதொரு கோவணத்தை நிறுத்துக் கொடுத்தால் போதும்' என்ருர்.

பொருளனைத்தையும் தராசில் நிறுத்தல் :-

அமர்நீதியார் அந்தணர் உரைத்த உரைப்படி பெரியதராசு ஒன்றை நாட்டினர். வேதியர் தண்டிலிருந்த கோவணத்தை அவிழ்த்து தட்டில் வைத்தார். அமர்நீதியார் மற்ருெரு தட்டில் எடைக்கு ஈடாக நெய்த கோவணம் ஒன்றை இட்டார். அமர்நீதியார் வைத்த தட்டுத் தாழவில்லை. ஒவ்வொன்ருகத் தம்மிடமிருந்த கோவணம் அனைத்தையும் இட்டார். தட்டு நிமிரவில்லை. நூல் பொதிகள் பொன் மணி முதலிய செல்வங்கள் அனைத்தையும் வைத்தும் தட்டு நேராகாதது கண்டு அனைவரும் அதிசயித்தனர். தம் செல்வங்களனைத்தையும் தராசிலிட்டும் தட்டுத் தாழாமை கண்ட அமர்நீதியார் வேதியரிடம் வந்து 'தலைவரே! என்னிடமுள்ள பொருள்களனைத்தையும் தட்டில்

இட்டுவிட்டேன். நானும் என் மனைவியும் மைந்தனும் மட்டுமே எஞ்சியுள்ளோம். எங்களையும் எடைக்கு எடையாக ஏற்றருள வேண்டும்' என்று வேண்டினார். வேதியராக வந்த இறைவன் அவர்கள் மூவரும் தராசில் ஏறுவதற்கு உடன்பட்டார். அமர்நீதி நாயனார் மனைவி மைந்தனோடு துலையை வலமாக வந்து 'நாங்கள் திருநீற்றில் கொண்டுள்ள அன்பு சிறிதும் பிழைத்திலோமெனில் இத் துலையின் தட்டு நேர் நிற்பதாக' என்று கூறி நல்லூர் இறைவனை வணங்கியவண்ணம் ஐந்தெழுத்தோதி துலாக்கோல் தட்டின்மீதேறினார். உடன் இரண்டு தட்டுக்களும் சமனாக நின்றன. மண்ணவர் வியந்தனர். விண்ணவர் மலர் மழை பொழிந்தனர்.

> " இழைத்த அன்பினில் இறைதரு நீற்றுமெய்யடிமை
> பிழைத்தி லோ மெனில் பெருந்துலை நேர்நிற்கஎன்று
> மழைத்த டம் பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்
> தழைத்த அஞ்செழுத் தோதினார் ஏறினார் தட்டில். "

சிவபிரான் காட்சி வழங்கல் :-

வேதியராய் வந்த இறைவன் மறைந்து உமையம்மையோடு அருட்காட்சி வழங்கினார். தராசுத்தட்டிலிருந்தபடியே நாயனாரும் அவர் மனைவியும் மைந்தனும் இறைவனை வணங்கினர். பெருமான் அவர்கட்கு சிவபதமளித்தருளி மறைந்தார். உடனே தராசு தெய்வ விமானமாக மாறி வான் வழியே சிவபதத்தை அடைந்தது. அமர்நீதி நாயனார் மனைவியோடும் மைந்தனோடும் சிவலோகமடைந்து இன்புற்றிருந்தார்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadaiyur.

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் அருளாட்சியிலுள்ள மற்ற திருக்கோயில்களைப்போலவே இந்த திருக்கோயிலும் மிக மேன்மையான சிறந்தமுறையில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இது மற்ற கோயில்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது. இறைபணியாளரும் மற்ற அலுவலர்களும் சிறந்த முறையில் வழிபாடியற்றித் தந்தனர்.

(ஒ-ம்.) ஜி. கலியாணம்,
துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழக
சோழநாட்டுத் தலயாத்திரைக் குழு.

சூரியன்

வேதாந்த சிரோமணி,

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

(மலர் 26, இதழ் 10, பக்கம் 570 இன் தொடர்ச்சி)

விருஷ்ணி குலத்தவனாகிய ஸத்ராஜித் நெடுநாள் சூர்யோ பாசனை செய்து, தினம் எட்டு பாரம் சுவர்ணத்தைக் கொடுக்கக் கூடிய ஸ்யமந்தகமணியைப் பெற்றான். ஸத்ராஜித்தின் தம்பி ப்ரஸேனன் அம்மணியை கழுத்தில் தரித்துக்கொண்டு, கிருஷ்ண னுடன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். காட்டில் அவன் சிங்கத்தினால் கொல்லப்பட்டான். அந்த சிங்கத்தை ஜாம்பவான் என்ற கரடி கொன்றது. ஸ்யமந்தகமணிக்கு ஆசைப்பட்டு கிருஷ்ணன் ப்ரஸேனனைக் கொன்றிருக்கலாம் என்று மக்கள் பேசிக்கொண்டனர். தனக்கு ஏற்பட்ட அபவாதத்தை நீக்கிக் கொள்ள, கிருஷ்ணன் ஜாம்பவானைக் கொன்று மணியை மீட்டு ஸத்ராஜித்தினிடம் கொடுத்தான். வீண் அபவாதத்திற்கு கிருஷ்ணனை ஆளாக்கினேமே என வருந்தி ஸத்ராஜித், தன் னுடைய பெண்ணான ஸத்யபாமா என்பவளையும், அவளோடு சீதனமாக ஸ்யமந்தகமணியையும் கிருஷ்ணனுக்குக்கொடுத்தான் என்று சூரியனுடைய அருளால் கிடைத்த ஸ்யமந்தக மணியைப் பற்றிய வரலாறு பாகவத புராணத்தில் ஸ்யமந்தகமணி உபாக் யானத்தில் விரித்துரைக்கப்படுகின்றது.

பிர்ம விஷ்ணு மகேச்வரரூபமுடையவன் என்றும், பிர்ம இந்திர, நாராயண சங்கரரூபீ என்றும், சூரியநாராயணன் என்றும், சிவசூரியன் என்றும், சிவபெருமானுக்குக் கண் சூரியன் என்றும், திருமாலுக்குக் கண் என்றும், திரிபுரஸம்ஹாரகாலத்தில் சிவபெருமானுடைய தேருக்கு சந்திர சூரியர்கள் சக்கிரமாக இருந்தனர் என்றும், இரண்டுகையுடையவர் என்றும், நான்கு கைகளை யுடையவர் என்றும் பல்வேறு வகையாகப் புராணங் களில் சொல்லப்பட்டிருப்பது, மீமாம்ஸகர் சொல்லும் முறையில் வெவ்வேறு தேவதைகளாகக் கொள்ளின் மிகவும் பொருந்துவ தாகும்.

தினகர, திவாகர, திவஸகர, தினக்ருத், அஹஸ்கர என்ற பதங்கள் பகலைச் செய்பவன் என்ற பொருளுடையன. பிரபாகர, விபாகர, பாஸ்கர என்பன ஒளியினைச் செய்பவன் என்ற பொருளிலும் விவஸ்வான், கிரணமாலீ, கபஸ்திமாலீ என்பன கதிருடையவன் என்ற பொருளிலும், ஸஹஸ்ரகிரண, ஸஹஸ்ரரச்மி என்பன போன்றவை ஆயிரம் கதிருடையவன் என்ற பொருளிலும் உஷ்ணாம்சு, சண்டதீதிதி என்பன போன்றவை வெம்மை பொருந்திய கதிருடையோன் என்ற பொருளிலும் வந்துள்ளன.

சூரிய ஒளியில் ஊதா முதலிய ஏழு நிறங்கள் அடங்கியுள்ளன என்று பெரிய விஞ்ஞானி எனப் புகழ் படைத்த நியூட்டன் வெளியிட்ட தத்துவம், சூரியனுடைய பெயர்களில் ஒன்றாகிய சித்ரபானு (சித்ர - பல நிறம் பொருந்திய. பானு - கதிருடையவன்.) என்ற பதத்திலேயே தெரிகிறது.

த்வாதசாத்மா என்ற ஒரு பெயரும் சூரியனுக்கு உண்டு. பன்னிரண்டு ரூபமுடையவன் என்ற பொருளுடையது. மேஷம் முதலிய பன்னிரண்டு ராசிகளில் வருண, சூர்ய, ஸஹஸ்ராம்சு, தாதா, தபன, ஸவிதா, கபஸ்திக, ரவி, பர்ஜன்ய, த்வஷ்டா, மித்ரன், விஷ்ணு என்ற பெயருடன் இருப்பதாகக் கூறப்படுகிறது. சதுரகராதியில் மேஷாதிகளில் சஞ்சரிக்கும் சூரியனுடைய பெயர் வேறு வகையாக உள்ளது. விச்வகர்ம சாஸ்திரத்தில் பன்னிரண்டு சூரியர்கள் கூறப்பட்டு லக்ஷணமும் கூறப்படுகிறது. காச்யபசில்ப சூத்திரத்திலும் ஆதித்யர் பன்னிருவருடைய லக்ஷணம் கூறப்படுகிறது. பெயரும் லக்ஷணமும் வேறுபாடு உடையதாகவே உள்ளன.

பெரும்பாலும் சிவாலயங்களில் உள்ள சூரிய பிம்பம் இரண்டு கைகளிலும் தாமரை மலருடனேயே காட்சியளிக்கும். விச்வகர்ம சாஸ்திரத்தில் பன்னிரண்டு சூரிய மூர்த்திகளும் நான்கு கையுடையவர்களாகவே சொல்லப்பட்டிருக்கிறார்கள். முன்புறம் உள்ள வலது, இடது கரங்கள் இரண்டிலும் தாமரைப்பூ இப் பன்னிரண்டு மூர்த்திகளுக்கும் இருக்கும். பின்புறமுள்ள வலது இடது கரங்களில், முறையே [1] தாதாவுக்கு தாமரைமாலை. கமண்டலு. [2] மித்திரனுக்கு சோமம், சூலம். [3] அர்யமா என்ற சூரியனுக்கு சக்ரம், கதை. [4] ருத்ரனுக்கு அக்ஷமாலை, சக்ரம், [5] வருணனுக்கு சக்ரம், பாசம். [6] சூரியனுக்கு கமண்டலு, அக்ஷமாலை. [7] பகனுக்கு சூலம், சக்ரம். [8] விவஸ்வானுக்கு சூலம், மாலை. [9] பூஷனுக்கு தாமரை. [0] ஸவிதாவுக்கு கதை, சக்ரம். [11] த்வஷ்டாவுக்கு ஸ்ருக், தங்கத் தாமரை மொட்டு.

[12] விஷ்ணுவுக்கு சக்ரம், தாமரை இவை இருக்கும். இவர்களில் பூஷனுக்கு நான்கு கைகளிலும் தாமரை இருக்கும். மித்ரனுக்கு மட்டும் மூன்று கண்கள் என்றும் கூறப்படுகிறது. இப்பன்னிரு வரில் மித்ர, அர்யமா, பக என்பவர்கள் பாரசீகர் வேதமாகிய ஸெண்டவஸ்தையிலும் கூறப்படுகின்றனர்.

இனிப் புராணங்களில் சூரியனைப் பற்றி சொல்லப்படுவன பற்றிக் கூறலாம். எல்லாப் புராணங்களிலுமே சூரியனைப்பற்றி ஒரு வரலாறு இல்லாமல் இருக்க முடியாது. ஸர்க்கம், பிரதி ஸர்க்கம், வம்சம், மன்வந்தரங்கள், வம்சானுசரிதம் என்ற ஐந்தையும் கூறவே எழுந்தன புராணங்கள். அவற்றுள் ஸர்க்கம், வம்சம், மன்வந்தரம் இவற்றை விரித்துரைக்க. மனுவுக்குத் தந்தையாயும், பல வம்சங்களை உண்டுபண்ணிய வருமான சூரியனைப்பற்றி கூருமல் இருக்க முடியாதன்ரு ?

எழுபத்தொரு தேவ யுகம் கொண்ட காலத்திற்கு ஒரு மன்வந்தரம் என்று பெயர். அந்தக் காலத்திற்கு அதிபதியாக உள்ளவர் மனு எனப்படுவார். மன்வந்தரம் பதினுன்கு. ஸ்வா யம்புவ, ஸ்வாரோசிஷ, ஔத்தமி, தாமஸ, ரைவத, சாக்ஷுஷ, வைவஸ்வத, ஸாவர்ணி, தக்ஷஸாவர்ணி, பிர்மஸாவர்ணி, தர்ம ஸாவர்ணி, ருத்ரஸாவர்ணி, ரௌச்யஸாவர்ணி, தேவஸாவர்ணி என்று பதினுன்கு மனுக்களுக்கும் பெயர். இப்பொழுது ஏழாவது மனு வைவஸ்வதருடைய காலம்.

சூரியர்களும் அதிதியின் பிள்ளைகளே. ஆதலின் ஆதித் யர்கள் எனப்படுவர். தேவர்களும் அதிதியின் பிள்ளைகளே. திதியின் பிள்ளையாகிய தைத்யர்களால் (அசுரர்களால்) தேவர் களுக்குரிய யாகபாகங்கள் கவரப்பட்டன. வருந்திய திதி பாஸ் கரனை நோக்கித் தவமியற்றினுள். அவளுடைய தவத்திற்கு இரங்கி பாஸ்கரன் பிரசன்னமானபோது, "உன் சகோதரர் களுக்குரிய யாகத்தின் பாகங்கள் அசுரர்களால் கவரப்பட்டன. அவர்களைக் கொன்று தேவர்கள் யாகத்தில் ஹவிர்பாகத்தை அடையும்படி செய்ய, உன்னருளால் உன்னைப்போல் காந்தி வாய்ந்த புத்திரனை தந்தருள்வாய்" என வேண்டினுள். பாஸ் கரனும் "அப்படியே ஆகுக!" என வரமளித்தான். திதி கருவுற்ருள். தேவனருளால் உண்டான கருவாதலின், அதிக மான சாந்திராயணம் முதலிய உபவாச விரதங்களைக் கைக் கொண்டு திதி கருவைக் காத்தாள். மிகவும் அதிகமான விரதங் களால் பயந்த திதியின் கணவனுகிய கச்யபர், "ஏன் கருவை மரிக்கச் செய்கிருய்?" என்று வினவினுர். அந்தக் கருவிலிருந்து

தோன்றியபடியால் மார்த்தண்ட என்ற பெயர் சூரியனுக்கு ஏற்பட்டது என்று மார்க்கண்டேய புராணம் கூறும்.

मारितं च यतः प्रोक्त मेतदण्डं त्वयोदितम् ।
तस्मान्मुने सुतस्तेऽयं मार्तण्डाख्यो भविष्यति ॥

மத்ஸ்ய புர்ராணத்தில் ஸம்ஞா, ராக்ஞி, ப்ரபா எனச் சூரியனுக்கு மூன்று மனைவிகள். ரைவதனுடைய பெண்ணான ராக்ஞி என்பவளுக்கு ரைவதன் என்ற ஒரு பிள்ளை. ப்ரபா என்பவளுக்கு ப்ராபாதன் ஒரு பிள்ளை. த்வஷ்டாவின் பெண் ஸம்ஞா என்பவளுக்கு மனு, யமன், யமுனா (இரட்டையர்) ஆக மூன்று குழந்தைகள். ஸம்ஞா சூரியனின் உஷ்ணம் தாங்க முடியாமல். தன்னுடைய சாயையை (நிழலை) வீட்டில் இருக்கச்செய்து தந்தை வீட்டிற்குச் சென்றாள். மணமான பெண் கணவனுடைய அனுமதியின்றி, அவனறியாமல் தந்தை வீட்டிற்கு வரலாகாது. அங்கு இருக்கவும் கூடாது. ஆதலால் நீ என் வீட்டிற்கு வராதே எனப் பெண்ணை த்வஷ்டா துரத்திவிட்டான். அவள் குதிரை உருவுடன் ஹிமய மலைச்சாரலில் இருந்தாள். காலப்போக்கில் சூரியன் சாயையுடன் சேர்ந்து சனைச்சரன், தபதி (ஒரு நதி) விஷ்டி (ஒரு கரணம்) ஆகிய மூன்று குழந்தைகளையடைந்தாள். சாயா ஸம்ஜ்ஞையின் புதல்வனாகிய யமனிடம் கொஞ்சம் அன்பு குறைந்தவளாகவும், தன் புதல்வன் சனியிடம் அதிக அன்புள்ளவளாகவும் நடந்துகொண்டாள். மூத்தவனாகிய மனு அதைப் பொறுத்துக்கொண்டான். யமன் தாயின் அன்புக் குறைவைப் பொறுக்கமாட்டாதவனாக காலைத் தூக்கி மிரட்டினான். சாயா, தாயிடம் காலைத் தூக்கி மிரட்டுகிறாயே! உன்னுடைய இந்தக் கால் புழு, சீழ் இவைகளையுடையதாக ஆகட்டும் எனச் சபித்தாள், யமன் தந்தையான சூரியனிடம் சென்று, பிள்ளை எவ்வளவு பிழை செய்தாலும் தாயார் பொறுத்துக்கொள்ளுவாள். பிள்ளையைச் சபிக்கமாட்டாள். இவள் என்னைச் சபித்தாள். ஆதலால் இவள் என்னுடைய தாயார் இல்லை என்று கூறினான். (மற்றொரு புராணத்தில் "இந்தக்கால் ஒடிந்துபோகட்டும் என்று சபித்தாள்" என்று உள்ளது) சூரியன் ஒரு ஓணானைக் கொடுத்து "இது உனக்கு உண்டாகும் புழுக்களையும் சீழையும் நீக்கும்; மற்ற எல்லோருடைய சாபத்தையும் நீக்கலாம். தாயின் சாபத்தை நீக்கமுடியாது. இவ்வளவுதான் என்னால் இதற்குப் பரிஹாரம் செய்யமுடியும்" என்று கூறி வீட்டிற்குச் சென்றான்.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur

I had the blessings of this Lord for an opportunity to worship in this temple of Lore and renoun. I am one among the Millions of humble devoties struck with admiration at the valuable and everlasting contribution of this Adhinam by the excellent upkeep and administration of this temple to Hinduisum, my humble homages to the Lord and thanks-givings to the Adhinam.

(Sd.) T. P. Karunakara Nair,

8—7—67. P. A. to the Collector,

Tanjore.

We the 16 Members of the Metal Box Co., of Indian Ltd,, Madras - 21 visited the temple to-day afternoon and all of us were very much impressed by the neatness, of the temple and its surroundings. We felt that the 'cup' given to this temple for the past 2 years successively is well deserved. We were also given courteous attention.

(Sd.) N. H. Krishnan,

1—10—67. Leader of the Party.

As members of the Young Men's Indian League we came over hear as a party. Our pleasure at seeing the temple with its hoary heritage has been surpassed by the kindness reception and hospitality of the officers in-charge. We have no hositation in concluding that the source of this great inspiration is the Dharmapuram Adheenam Sannithanam whose abundant grace we experienced a day before. May God grant that this

institution grows from more to more and spreads the tenets of Hinduisum to the interst.

(Sd.) K. Venkatasamy Naidu,
Former Minister to Madras State.

(Sd.) K. Srinivasan,
Advocate, Madras.
Vice President.

2—10—67.

To Pray at Amirthaghatesvara. Temple is to seek protection for mankind and blessings of Lord Mirithunjaya so that all the mankind may have the youth of Sri Markandaya.

May Lord bless all.

(Sd.) R. S. Shah,
Director, United Commercial Bank
Calcutta.

17—9—67.

விசேஷ நாட்கள்

10—11—67 முதல் 10—12—67 முடிய

14—11—67	பிரதோஷம்
15—11—67	திருமூல நாயனார் திருநக்ஷத்திரம்
16—11—67	நெடுமாற நாயனார் திருநக்ஷத்திரம்
17—11—67	வேளூர் கிருத்திகை.
26—11—67	மெய்ப்பொருள் நாயனார் திருநக்ஷத்திரம்
27—11—67	ஆனாய நாயனார் திருநக்ஷத்திரம்
29—11—67	பிரதோஷம்
3—12—67	மூர்க்க நாயனார் திருநக்ஷத்திரம்
4—12—67	சிறப்புலி நாயனார்

தருமை ஆதீன மடாலயத்தில்:



தமிழக அரசு, அமைச்சர், மாண்புமிகு, திரு. இரா. நெடுஞ்செழியன் M. A.
அவர்கள் உலகத்தமிழ் மகாநாட்டுக்கு ஆதீன நன்கொடையாக
ரூ. (30,000) க்கு செக்கைப் பெற்றுக்கொள்ளுதல்.

ஆதீன மடாலயத்தில் :

தமிழக அரசு அமைச்சர், மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் M. A.
அவர்கள் ஆதீன வெளியீடு - திருக்குறள் - உரைவளத்தைப்
பெற்றுக்கொள்ளுதல்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகச் சார்பில்

20—10—67ல் நிகழ்ந்த

திருவள்ளுவர் விழா

தமிழக அரசு, அறநிலையத்துறை ஆணையர்,

திரு. ஆ. இராதாகிருஷ்ணன் M. A., B. L.

அவர்கள் ஆற்றிய

தலைமையுரைச் சுருக்கம்

தருமையாதீனம் மகாசந்நிதானம் அவர்கள் சிறப்பாக அருளாட்சி நடத்தி வருகிறார்கள் என்றும், நல்ல பல காரியங்கள் செய்து வருகிறார்கள் என்றும் எல்லோருக்கும் தெரியும். அவர்கள் அறுவை விடுதி ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். சித்தவைத்தியசாலை ஏற்படுத்தி வெகுசிறப்பாக நடத்தி வருகிறார்கள். கோயில்களை வெகு சுத்தமாக வைத்தும் திருப்பணி செய்தும் வருகிறார்கள். பல்கலைக் கல்லூரி வைத்து நடத்தி வருகிறார்கள். இக்கல்லூரியின் குருஞானசம்பந்தர் மாணவர் கழகச் சார்பாக நடக்கும் திருவள்ளுவர் விழாவில் எனக்கு வாய்ப்புக்கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம்கல்வி அமைச்சரே அறநிலையம், தொழில் ஆகிய துறைகளையும் கவனித்து வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இவர்கள் ஒவ்வொரு துறையையும் அக்கறையோடும் ஆர்வத்தோடும் நடத்தி வருகிறார்கள். அமைச்சர் அவர்களைத் திருவள்ளுவர் விழாவில் கலந்து கொள்ளுமாறு ஆசிரியர்களும் மாணவர்களும் கேட்டுக் கொண்டார்கள். அமைச்சர் அவர்கள் பல வேலைகளிருந்தும் இங்கு வந்திருக்கிறார்கள். மாணவர்கள் வெகுசிறப்பாகப் படித்துக்கொண்டு வருகின்றார்கள் என்பது அவர்களைப் பார்க்கும்போதே தெரிகின்றது. அமைச்சர் அவர்களை சிறப்புரை ஆற்றுமாறு கேட்டுக்கொண்டு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு, கல்வி, தொழில். அறநிலைய அமைச்சர்,

மாண்புமிகு, திரு. இரா. நெடுஞ்செழியன் M. A., அவர்கள் ஆற்றிய

சிறப்புரையின் சுருக்கம்

அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் அவர்களே! அறநிலையப் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளே! அறங்காப்பாளர்களே! ஆசிரியப் பெருமக்களே! மாணவி-மாணவ நண்பர்களே! மற்றுமுள்ள அன்பர்களே! தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர் கழகச் சார்பில் நடைபெறும் திருவள்ளுவர் விழாவில் கலந்துகொள்ள மகிழ்ச்சி ஏற்பட்டிருப்பதோடு அறிவும் ஆற்றலும் மிளிர்கின்ற நிலையில் மிக அழகுற இங்கு ஏற்பாடு செய்து இருக்கின்ற பாங்கினை அறிய மகிழ்ச்சியோடு பூரிப்பும் பெருமையும் அடைகிறேன். ஆதீனத்தைக் காணும் வாய்ப்பும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துடன் அளவளாவக் கிடைத்த வாய்ப்பும், உங்கள் அனைவரையும் காண்கின்ற வாய்ப்பும்; இன்று ஏற்பட்டிருப்பதற்காகப் பெருமகிழ்ச்சியுறுகிறேன். இந்த மகிழ்ச்சிகரமான வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த நண்பர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்கள் முன்னுரையில் எடுத்துத் தெரிவித்ததைப் போன்று பல அறநெறிச்செயல்கள் நடைபெறுகின்ற வகையில் தருமை ஆதீனம் பல அறநெறிச் செயல்களை ஆற்றி வருவது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அரசாங்கம் பல செயல்களை நடத்தி வருகிறது என்றால் வரியின் மூலமாகவும், சட்டத்தின் மூலமாகவும், அதிகாரத்தின் மூலமாகவும், ஆணையின் மூலமாகவும், ஆதிக்கத்தின் வாயிலாகவும் மக்களிடத்தே பொருளைத் திரட்டி, திரட்டப்பட்ட பொருள் எல்லா மக்களுக்கும், எல்லா வகையிலும் எல்லா வழியிலும் பயன்படவேண்டும் என்று பணியாற்றுகின்றது.

தருமை ஆதீனம் போன்ற இப்படிப்பட்ட அறநிலையங்களெல்லாம் அன்பின் அடிப்படையில் மக்கள் தந்த பொருளையும். நிலங்களையும் ஒன்று திரட்டி வைத்துப் பல நூற்றாண்டுகளாக அன்பின்வழியிலே, திக்கற்றவர்கள், ஆதரவற்றவர்கள், ஏழைகள், எளியவர்கள், முடியாதவர்கள், வறுமையுற்றவர்கள்,

வசதியற்றவர்கள், வாட்டங்கொண்டவர்கள் ஆகிய அத்தனை பேருக்கும் சென்று சேருவதற்குப் பயன்படுத்தி வருகின்றன. அதனால்தான் தருமை ஆதீனம்போன்ற ஆதீனங்கள் நின்று நிலவி வருகின்றன.

இன்றைக்குத் தமிழக அரசு அதிகாரத்தின் துணைகொண்டு மக்களிடத்தில் நிதி திரட்டி அதைச்சேர்த்துக் கல்வி பணிக்கு என்றும், மருத்துவப் பணிக்கு என்றும் பல்வேறு பணிக்கு என்றும் செலவழிப்பது போன்று இத்தகைய அறநிலையங்கள் பெருமக்கள், பெருநிதிகொண்ட மக்கள், நிலங்கொண்ட மக்கள், உடைமை உணவு கொண்டவர்கள் இப்படிப்பட்ட அறநிலையங்களில் ஒப்படைத்து நல்ல துறவற மனப்பான்மை கொண்டவர்களால் சாதாரண ஏழை எளியவர்கள் பாட்டாளி மக்கள் ஆகிய அத்தனை மக்களுக்கும் சேரும்படி செய்தார்கள். அந்த நல்ல எண்ணத்தினால்தான் இப்படி பட்ட நிலையங்களை எல்லாம் நிறுவி இருக்கிறார்கள். இந்தத் தருமையாதீனம் பல்வேறு அறப்பணிகளையும், துவக்கப்பள்ளிகளையும், உயர்நிலைப்பள்ளியையும், தமிழ்க் கல்லூரியையும், மருத்துவமனைகளையும், இலவச மருத்துவ உதவிகளையும், திக்கற்றோர் இல்லங்களையும் நிறுவி அறப்பணிகளைச் செய்து, மேலும் பல அறப்பணிகளைச் செய்யத் திட்டம் தீட்டி, அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறது என்பதை அறிய நான் பெருவகை கொள்கிறேன்- பெரு மகிழ்ச்சியுறுகிறேன். தருமை ஆதீனத்தின் சார்பாக அமைந்த இக்கல்லூரியில் அமைந்த மாணவர் கழகச் சார்பாக திருவள்ளுவர் விழாவைக் கொண்டாட மாணவர் கழகத்தினர் முன் வந்திருப்பதும், அதில் ஆணையர் தலைமை தாங்கவும், எனக்கு அதில் உரையாற்றுகின்ற வாய்ப்பு கிட்டியிருப்பதும் மிகவும் பாராட்டி மகிழ்தற்குரியன. தமிழகத்தின் அறிவின் ஆற்றலை - உலகத்திற்கு என்றென்றும் நிலைநாட்டத்தக்க அறிவு ஆற்றலைத் தந்த அத்தகைய பெருமகன் திருவள்ளுவர் ஆவார்.

அந்தத் திருவள்ளுவர் தந்த அரும்பெருங் கருத்துக்களை கருத்தின் ஆழத்தை எந்த மூலை முடுக்குகளில் இருக்கின்ற அறிஞர்களும் பாராட்டிப் போற்றி வருகிறார்கள் என்பதை நாம் காணுகிறோம். வள்ளுவர் கூறிய குறள்நெறி எல்லாக் காலத்திற்கும், எல்லா நாட்டிற்கும், எல்லா நிலையினருக்கும், எல்லாக் கட்சியினருக்கும், எல்லா வகுப்பினருக்கும், எல்லாத் திறத்தார்க்கும் பயன்படுவதைப் பார்க்கிறோம், எல்லாருக்கும்

பொருந்துகின்ற பொதுத்தன்மை திருக்குறளில் அமைந்திருப்ப தால்தான் அதனை உலகோர் அத்தனைபேரும் போற்றுகிறார்கள்; பாராட்டுகிறார்கள்.

திருக்குறளில் கூறப்பட்டுள்ள பல்வேறு கருத்துக்கள், வேறு எந்த அற நூல்களிலும் நீதி நூல்களிலும் கி. மு. 2000-த்துக்கு முன்னே அல்லது கி. பி 2000 த்திலோ எழுந்த எந்த நூல்களிலும் கூறப்படவில்லை. கி. மு. 2000-த்திற்கு மட்டுமல்லாமல், கி. பி. 2000-த்திற்கு மட்டுமல்லாமல் கி. பி. 5000-த்துக்கும் பொருந்தி வரும் கருத்துக்களை 2000 ஆண்டு களுக்கு முன்பே தெளிவுற, பாங்குற, செம்மையாக எடுத்துக் கூறும் வன்மை வள்ளுவருக்கு அமைந்ததைப்போன்று வேறு எந்தப் புலவனிடத்திலும் அமையவில்லை என்பதை உலகப் பேரறிஞர் பலர் ஒப்புக்கொள்கின்றனர். உலகத்தின் தத்துவப் பேரறிஞர் ஆல்பர்ட் சுவிட்ஸர் என்பவர் அண்மையில் திருக்குறள் கையில் கிடைக்க அதில் சில குறட்பாக்களைப் படித்து அதி லுள்ள கருத்தை உணர்ந்து பின்பு திருக்குறள் முழுவதையும் படித்து மக்கள் வாழ்வுடன் தொடர்புபடுத்தி எல்லா நாட்டிற் கும் எல்லா மக்களுக்கும், எல்லாக் காலத்திற்கும் பொருந்தி வரும் இந்நூலைப் போன்று வேறு எந்த நூலையும் நான் வாழ்க்கை யில் கண்டதில்லை என்று பாராட்டிக்கூறி உள்ளார் ஆல்பர்ட் சுவிட்ஸர் கூறுகின்ற அளவுக்குப் பாராட்டுப்பெற்ற நூல் திருக்குறள். இத்திருக்குறள் 30 மொழிகளில் மொழி பெயர்க் கப்பட்டு, அண்மையில் சீன மொழியிலும் மொழி பெயர்க்கப் பட்டு உள்ளது. அதன்படிகள் கூட என்னிடத்தில் உள்ளன. அச்சீனப் பதிப்பை வருகின்ற ஜனவரி மாதத்தில் நடைபெறு கின்ற உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிட இருக்கிறார்கள்.

சிலர் பலர் கருத்துக்கள் சில பல நேரங்களுக்குத்தான் பயன்படும். சிலர் கருத்துக்கள் சிலருக்குத்தான் பயன்படும். நாளிதழில் கூறப்படும் கருத்துக்கள் ஒருநாள் அல்லது ஒருவாரம் அல்லது ஒரு மாதத்திற்கு மட்டும்தான் பயன்படும். சில கருத்துக் கள் சில இடத்திற்குத்தான் பொருந்தும். சில நூல்களில் அணியழகும் உவமையழகும் சொல், பொருள் அழகும்தான் இருக்கும். காலத்தோடு ஒட்டி வராமலும் இருக்கும். சிலருடைய வரலாறு மட்டும் அறிய, சில நூல்கள் பயன்படும்.

வள்ளுவர் கூறிய கருத்துக்கள் எல்லா நாட்டிற்கும் எப்போதும், எல்லாக் காலத்துக்கும் பொருந்தி வருவதால்தான்

பாரதியார் வள்ளுவனை இத்தமிழகம் ஒரு ஊருக்கு மட்டும், ஒரு சமயத்திற்கு மட்டும், ஒரு வகுப்பிற்கு மட்டும் தரவில்லை; உலகினுக்குத் தந்துவான்புகழ் கொண்டது என்று சொன்னார். அமெரிக்கர்களிடம் சென்று அவர்களைக் கூட்டி வந்து நம் நாட்டின் தொழில் வளங்களைக் காட்டினால் அவர்கள் இவையெல்லாம் எங்களிடம் இருந்து தான் கற்றுக் கொண்டீர்கள் என்பார்கள். ஆனால் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளைக் காண்பித்து இதைப்போல உங்கள் நாட்டுக் கவிஞன் உலகத்திற்கே - உலகமக்களுக்கே பொருந்திவரும் இலக்கியத்தை எழுதியுள்ளானா என்றால், தலைகுனிவார்கள். நாம் நிமிர்ந்து நிற்கலாம். அமெரிக்கர்கள் அதை கொலம்பஸ் கண்டுபிடித்த பின்னர்தான் நாகரிகம் அடைந்தவர்கள். ஆனால் 2000 ஆண்டுகட்கு முன்னரே திருக்குறள் எழுதிய எங்கள் நாட்டு வள்ளுவரைப்போல் உங்கள் நாட்டில் கவிஞர் இருக்கிறாரா என்றால் அமெரிக்கர்கள் இல்லை என்பார்கள்.

ஒரு சமயம் ரஷ்யக் கலைஞர்கள் இந்தியாவிற்கு வந்தனர். அவர்களை ஒரு சினிமாஸ்டுடியோவுக்கு அழைத்துச்சென்று காண்பித்தார் N. S. கிருஷ்ணன். பல சாமான்களை (கடிகாரம், காமிரா, கண்ணாடி முதலியவற்றைப்) பார்த்த அவர்கள் இவை எங்குத் தயாரிக்கப்பெற்றவை என்று கேட்டார்கள். N. S. கிருஷ்ணன் அவர்கள் வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டன என்றார். உங்கள் நாட்டில் தயாரிக்கப்பெற்றது இதில் எதுவுமில்லையா என்றார்கள், எங்கள் நாட்டில் தயாரித்தது இந்த நான்கு சுவர்தான் என்றார். பிறகு அவர்கள் N. S. K. யிடம் உங்களுக்கென்று உரியது ஒன்றும் கிடையாதா என்றார்கள். உடனே N. S. K. எங்களுக்கென்று திருவள்ளுவரியற்றிய திருக்குறள் உண்டு என்று பெருமிதத்துடன் கூறினார். இவ்வாறு தமிழர்களுக்குப் பெருமைதேடித் தருவது, தமிழர்கள் தங்களுடையதென்று கூறிப் பெருமைகொள்வது திருக்குறள் ஒன்றுதான்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக."

கற்பவைகளைக் கசடற மனக்கசடுகள் நீங்கப் படித்தல் வேண்டும். அதன்படி நடத்தல் வேண்டும். இக்கருத்து அமெரிக்கா, ஜப்பான், ரஷியா முதலிய எல்லா நாட்டிற்கும் நம் நாட்டிற்கும் பொருந்தும்.

இனிய மாங்கனியும் புளிப்பான மாங்காயும் ஓரிடத்தில் இருக்கின்றன. அதனை எடுக்கின்ற முயற்சியும், அதனால் வாயில் ஊறுகின்ற உமிழ்நீரும், அதனை எடுக்க செலவிடுகின்ற ஆற்றலும் அவாவும் எல்லாம் ஒன்றுதான். எனவே பழத்தினை எடுக்கின்றது எப்படியோ அப்படியேதான் காயினை எடுப்பதும். ஆயினும் காயினை எடுப்பவனும் இருக்கத்தான் செய்கின்றான், எனவே இனிய கனியினை எடுக்காது புளிக்கின்ற காயினை எடுப்பது போன்றது இனிய சொற்கள் இருக்க, இன்னாத சொற்களைக் கூறுவதாகும்.

தன் குழந்தைகளை ஒருவன், கண்ணே வா! அன்பே வா! கற்கண்டே வா! எனக் கூறுவதற்கு இனிய சொற்கள் இருக்க, கழுதையே வா! குரங்கே நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று இன்னாத சொற்களைக் கூறுவது எதற்கு? இந்த இன்னாத சொற்களைக் கூறாது கண்ணே வா! கற்கண்டே வா! அன்பே வா! என இனிய சொற்களைக் கூறுவதால் அவனுக்கு என்ன நஷ்டம்? இதைத்தான் திருவள்ளுவர் கூறுகிறார்,

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

"அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்."

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டின் ஜனத்தொகையும், நீள அகலமும் முக்கியம் இல்லை. எனவே ஒரு நாடு அறிவு, ஆற்றல் இவற்றை எங்ஙனம் பயன்படுத்தி இருக்கிறது என்பது முக்கியம். எனவே அந்த அடிப்படையில் பார்த்தால் இந்தியாவின் ஜனத்தொகை $49\frac{1}{2}$ கோடி மக்களில் ஒரு வருடத்திற்கு அதாவது $365\frac{1}{4}$ நாளுக்கு ஒரு தனி மனிதனுடைய சராசரி வருமானம் ரூ. 325 ஆனால் அமெரிக்காவின் தனிமனிதனின் வருமானம் ரூ. 16500. அவர்களுக்குத் தேவையான உடையும், உணவும் தான் இந்தியர்களுக்கும் தேவைப்படுகின்றன.

எனவே 400 ஆண்டுகட்கு முன்பு காட்டுமிராண்டிகள் சிவப்பு இந்தியர்கள் ஆண்ட நாடும், மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் இன்றி மரப்பொந்துகளில் வாழ்ந்த நாடும், ஆகிய அமெரிக்கா தன் அறிவு, ஆற்றலைப் பயன்படுத்தி நல்ல பயனை அடைந்துள்ளது.

இந்தியர்கள் 1956 லிருந்து 1966 வரை அடைந்த முன்னேற்றம் 1956ல் 100 என்ருல் 10 வருடத்தில் 17 ரூபாய்தான் ஏறி 117 ரூபாயாக உள்ளது. ஆனல் ஜப்பானில் 10 வருடத்தில் 70% சதவீதம் முன்னேறி உள்ளது. எனவே குண்டூசி செய்யக்கூட இரும்பு கிடைக்காத ஜப்பான் நாட்டினர் இவ்வளவு முன்னேறக் காரணம், அவர்களுடைய அறிவுதான்.

இந்தியாவில் பெண்மணிகள் பேரீச்சம் பழத்திற்குப் போட்ட கழிவான இரும்புச் சாமான்களை இந்திய வியாபாரிகள் குறைந்த பணத்திற்கு வாங்கி அமெரிக்காவிற்கு அனுப்ப, அவர்கள் அவைகளை 3000 அல்லது 4000 மதிப்புள்ள பொருளாக இந்தியாவுக்கு அனுப்புகின்றனர். எனவே நம்மிடமே குறைந்த விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு அதனை ஒரு பொருளாக ஆக்கி நம்மிடமே விற்கின்ருர்கள். அதற்கு அவர்களுடைய அறிவுதான் காரணம். எனவே இந்தியர்கள் ரூ. 3000ஐ இழந்து 3½ ரூ. பெறுகின்றனர். எனவே,

அறிவுடையார் 3000 ரூ. உடையார் அறிவிலார் 3½ரூ. உடையார் என்பதாகின்றது.

மழையானது கெடுக்கவும் செய்யும் நம்மை எடுக்கவும் செய்யும் என்பதனை வள்ளுவர்,

" கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை "

எனவே இப்பொழுது மழை நம்மைக் கெடுத்துவருகிறது. குறுவையைக் கெடுத்து வருகிறது. ஆனல் இதே மழையும் வளத்தைப் பலமடங்காகவும் பெருக்கவும் செய்கிறது.

" இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு "

என்று திருவள்ளுவர் எல்லா மக்களுக்கும் அரசு பகுத்துக் கொடுக்கும் கடமையை உணர்த்தியுள்ளார்.

" இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும் "

என, ஒரு நாட்டிற்கு இடித்துச்சொல்பவர் இல்லை என்ருல் அந்நாட்டைக் கெடுக்கப் பகைவன் வேண்டாம் என்று

திருவள்ளுவர் கூறுகின்றார். எனவே எதிர்க்கட்சி இருத்தல் வேண்டும். அப்பொழுதான் ஆட்சியாளர்கள் குற்றங்கள் செய்யும்போது இடித்துக்காட்டி நல்வழிப் படுத்துவார்கள். திருவள்ளுவர் முன்பேயே இதனையும் கூறியுள்ளார்.

யாரிடம் ஐயுறக்கூடாது, யாரிடம் ஐயுறவேண்டும் என்பதை வள்ளுவனார்,

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

எனக் கூறியுள்ளார்.

காந்தி அடிகளை ஒருவன் சுட்டான் என்றால் அது போன்றவற்றையும் வள்ளுவர் கூறியுள்ளார்.

"தொழுதகை உள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து"

இவ்வாறு வள்ளுவர் ஒவ்வொரு நிகழ்ச்சியினையும் முன்பே அறிந்து பொருந்துமாறு கூறியுள்ளார். எனவே வள்ளுவர் கருத்துக்களை ஏற்றுக்கொண்டதோடு விடாமல் நடைமுறையில் கொண்டுவரவேண்டும்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

செய்யக் கூடியவற்றைச் செய்யவேண்டும். செய்யக் கூடாதவற்றைச் செய்தல் கூடாது. எனவே இளைஞர் சமுதாயம் செய்யக்கூடியவற்றை அறிந்து இப்பொழுதே செய்து வருதல் வேண்டும்.

இன்றைய நிலையில் நாமே ஒருவரை ஒருவர் நம்பாமல் இழித்து நடத்தி வருகின்றோம். மாடு, ஆடு இவைகளுக்குத் தருகின்ற மதிப்பு நாம் மனிதனுக்குத் தரவில்லை. தாய் மகனை நம்பவில்லை. அண்ணன் தம்பியை நம்பவில்லை.

எனவே நாட்டில் செய்யக் கூடியவற்றைச் செய்யவேண்டும். வரன்முறை கெடாது இருக்கவேண்டும் என்று கூறி விடை பெறுகின்றேன். வணக்கம்.

செய்திகள்

ஜன்மநக்ஷத்திர விழா

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களது ஜன்ம நக்ஷத்திர விழா திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி ஆலயத்தில் 31—10—67 செவ்வாய்க்கிழமை அன்று மிக்க சிறப்பாக நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி ஸ்ரீஅமிர்தகடேசப்பெருமான், ஸ்ரீ அபிராமி அம்மை, ஸ்ரீ காலசம்காரமூர்த்தி முதலிய மூர்த்திகளைத் தரிசனம் செய்து தருமைக்கு எழுந்தருளினார்கள்.

கந்தர்சஷ்டி தரிசனம்

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் வழக்கம்போல் இவ்வாண்டும் கந்தர் சஷ்டி தரிசனத்திற்குத் திருச்செந்தூருக்கு எழுந்தருளினார்கள். கந்தர்சஷ்டி திருவிழா நாட்களில் உபவாசத்துடன் மௌனத் தவமிருந்து செந்திற்குமரனை வழிபட்டு மகிழ்ந்தார்கள். இந்நாட்களில் முருகன் தோத்திரப் பாமாலைகள், திருமுறைப் பாராயணங்கள் முறையே நிகழ்ந்தன. சஷ்டித் திருநாளில் சூரசம்கார தரிசனம் செய்து திருநெல்வேலிக்கு எழுந்தருளினார்கள்.

தருமையாதீனத்திற்கு அமைச்சர் வருகை

தமிழக அரசு கல்வி, தொழில், அறநிலையத்துறை அமைச்சர் நாவலர். மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் M. A., அவர்கள் 20—10—67 வெள்ளிக்கிழமை காலை தருமையாதீனத் திருமடத்திற்கு வருகை புரிந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களை தரிசித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அமைச்சர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி. ஆதீன வெளியீடாகிய திருக்குறள் உரைவளத்தை வழங்கி, அண்மையில் சென்னையில் நிகழ இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டிற்கு ரூ. 30000 க்கு செக்கையும் வழங்கியருளினார்கள்.

உடன்வந்த தமிழக இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன் M. A., B, L, அவர்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னுடை போர்த்தியருளினார்கள்,

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில்

திருவள்ளுவர் விழா

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகச் சார்பில் 20—10—67 அன்று திருவள்ளுவர் விழா, திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நிகழ்ந்தது. விழாவிற்கு அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன் M.A., B.L., அவர்கள் தலைமையேற்று, தலைமையுரை ஆற்றினார்கள். தமிழக அரசு கல்வி, தொழில், அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் M. A., அவர்கள் வள்ளுவர் விழாவில் சிறப்புரை யாற்றினார்கள். வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆணையர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் வரவேற்று மலர்மாலை அணிவித்தார்கள். கல்லூரிப் பொறுப்பு முதல்வர் வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர் அவர்கள் அமைச்சர் அவர்களுக்கு வரவேற்புரை வாசித்து அளித்தார்கள். கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் நன்றி நவின்றார்கள். விழாவிற்கு மாயூரம் முதலிய இடங்களிலிருந்து அன்பர்கள் பலர் வந்திருந்து கேட்டு இன்புற்றனர், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பேருரைச் சுருக்கம் இவ்விதழில் வெளியிடப்பட்டிருக்கிறது.

வேளூரில் உயர்பள்ளிப் பிரார்த்தனை மண்டபம், வழிபடுவோர் தங்கும் விடுதி

திறப்பு விழா

வேளூர் தேவஸ்தானத்தில் பிரார்த்தனைக்காக வருகின்ற அன்பர்கள் தங்கியிருந்து தரிசனம் செய்தற்கு வசதியாக விடுதிகள் கட்டப்பெற்றுள்ளன. முன்புள்ள விடுதிகள் போதுமானவைகளாக இல்லாமலிருப்பதைக் கருதி புகைவண்டி நிலையத்திற்கருகில் மீண்டும் மேலும் ஒரு விடுதி புதிதாகக்கட்டப்பெற்றுள்ளது. இதனை 20—10—67 வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு தமிழக இந்து சமய அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன் M. A., B. L., அவர்கள் தலைமையில் தமிழக அரசு

கல்வி, தொழில், அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு நாவலர். திரு. இரா. நெடுஞ்செழியன் M. A., அவர்கள் திறந்து வைத்தார்கள். வேளூர் உயர்பள்ளிக்குப் புதிதாக தேவஸ்தானச் சார்பில் கட்டப்பெற்றுள்ள பிரார்த்தனை மண்டபத்தையும் அமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்கள்.

திருக்கோயிலில் அமைச்சர் அவர்களுக்கு திருக்கோயில் கட்டளைவிசாரணை வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை படித்தளித்தார்கள். இந்து சமய அறநிலைய ஆணையர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர் அவர்கள் வேளூர் ஆலயம் செம்மையுற வைத்துப் புரத்தலையும் அநாதாஸ்ரமம், சித்த வைத்தியசாலை இன்ன பிற அறச்சாலைகளை வைத்து இறையன்போடு அறப் பணிகள் வளர்த்து நிர்வாகத்தை நடத்தவேண்டிய முறையில் நடத்திவரும் தருமையாதீனத்தைப் பாராட்டியும் மக்கள் அரசாங்கமாக நடைபெற்றுவரும் அதனைப் போற்றி வளர்க்குமாறும் பேருரை யாற்றினார்கள். வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஆதீன உயர் அதிகாரிகளும் உடனிருந்து வரவேற்றார்கள்.

தருமையாதீனத் திருக்கோயில்களில் :

நவராத்திரி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத் திருக்கோயில்களில் நவராத்திரி விழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. 4-10-67 புதன்கிழமை முதல் தொடங்கி, 11—10—67 முடிய உள்ள நவராத்திரி நாட்களில் அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும், லக்ஷார்ச்சனை, சகஸ்ரநாமார்ச்சனைகளும் சிறப்புற நிகழ்ந்தன. ஒவ்வொரு நாட்களிலும் ஒவ்வொரு விதமான அலங்காரம் ஸ்ரீ அம்பாளுக்குச் செய்யப்பெற்றது. அலங்கார ஆராதனைகளை அன்பர்கள் பலர் வந்து தரிசித்து மகிழ்ந்தனர். நவராத்திரி விழாவைக் குறித்து சமயச்சொற் பொழிவுகளும் நடைபெற்றன.

தருமையாதீனம் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 6—10—67 அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை வித்துவான், திருமதி. ப. நீலா அவர்கள் தையல்நாயகி அந்தாதி என்ற தலைப்பிலும் 8—10—67 அன்று நாகப்பட்டினம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனப் புலவர், வித்துவான். திரு. வை. மு. சண்முக

தேசிகர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப்புலவர், மகாவித்துவான். திரு. சி. அருணை வடிவேல் முதலியார் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 6—10—67 அன்று மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்கார வேலனார், எம். ஏ., அவர்கள் அபிராமி அந்தாதி என்ற தலைப்பிலும், 8—10—67, 10—10—67 ஆகிய நாட்களில் தருமை யாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்களும், திருமதி. ப. நீலா அவர்களும் முறையே அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், திருநிலைநாயகி என்ற தலைப்புக்களில் சொற்பெருக்காற்றினார்கள்.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில். 6, 7, 8—10—67 ஆகிய நாட்களில் திரு. வை. மு. சண்முக தேசிகர், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், திருமதி. ப. நீலா ஆகியோர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், அபிராமி அந்தாதி ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 6—10—67 அன்று திருவையாறு, செய்தியாளர், திரு. ஜி. தனவேல் பிள்ளை அவர்கள் நவராத்திரிச் சிறப்பு என்ற தலைப்பிலும், 7—10—67 அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான். சிரோமணி, திரு. வி. சுபேசன் அவர்கள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பிலும், 9—10—67 அன்று திரு. சொ. சிங்காரவேலனார், எம். ஏ., அவர்கள் காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 6—10—67 அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச்செம்மல், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "அபிராமி அந்தாதி" என்ற தலைப்பிலும், 7—10—67 அன்று திரு. சொ. சிங்காரவேலனார் M. A., "திருவெண்ணீற்றுமையம்மை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்பிலும், 8-10-67 அன்று திரு. ஜி. தனவேல்பிள்ளை "சகலகலா வல்லி மாலை" என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்றினர்.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 8, 9—10—67 ஆகிய நாட்களில் திரு. வி. சபேசன், திரு. வி. சா. குருசாமி தேசிகர் முறையே "திருவெண்ணீற்றுமையம்மை பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 6—10—67 அன்று சிதம்பரம் பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் "சகலகலாவல்லிமாலை" என்ற தலைப்பிலும், 9—10—67 அன்று திரு. ஜி. தனவேல் பிள்ளை "நவராத்திரிச் சிறப்பு" என்ற தலைப்பிலும், 10—10—67 அன்று திரு. வி. சபேசன் "அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்றினர்.

பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் 10-10-67 அன்று திருவாரூர், உயர்பள்ளித் தமிழாசிரியர், திரு. மு. இரத்தின தேசிகர் "அபிராமி அந்தாதி" என்ற தலைப்பிலும், 11—10—67 அன்று திரு. வி. சா. குருசாமி தேசிகர் "மீனாக்ஷியம்மை பிரபந்தங்கள் என்பது பற்றியும் சொற்பெருக்காற்றினார்கள்.

குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 10—10—67 அன்று திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் "அபிராமி அந்தாதி" என்பதுபற்றியும், 11—10—67 அன்று திரு. சொ. சிங்காரவேலனார் M. A., அவர்கள் "மீனாக்ஷியம்மை இரட்டைமணிமாலை என்பதுபற்றியும் பேசினார்கள்.

கொறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 9—10—67. 10—10—67 ஆகிய நாட்களில் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை. திரு. ஜி. தனவேல் பிள்ளை, "அபிராமி அந்தாதி, நவராத்திரிச் சிறப்பு" என்ற தலைப்புக்களில் பேசினர்.

ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் திரு. ச. சேதுசுப்பிர மணிய பிள்ளை அவர்கள் "திருவெண்ணீற்றுமையம்மை பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள்.

ஆதீன தேவஸ்தானங்களில் நிகழ்ந்த சொற்பொழிவுகளை ஆங்காங்கும் அன்பர்கள் பலர் வந்து கேட்டு அம்மையின் அருளைப்பெற்று மகிழ்ந்தனர்.

எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(பிலவங்கஷு கார்த்திகைமீ 1உ முதல் 29உ முடிய)

(17—11—67 முதல் 15—12—67 முடிய)

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமேயாகும். சர்வ காரிய சித்தியும் நஷ்டதன பிராப்தியும் தனதான்ய விருத்தியும் கிராம அபிவிருத்தியும் கிரக லாபமும் இல்லற சுகமும் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் ஆரோக்யத்தை உண்டுபண்ணும். இடம் மாறி ஜீவனலாபம் ஏற்படும். தூர தேசத்திலிருந்து வாழ்த்துப்பத்திரம் கிடைக்கும். நூதன வியாபார விருத்தியும் உலக பிரசித்தியும் உண்டுபண்ணும். கிரகசுகம் நிரந்தரமாய் அனுபவிக்க வசதிகள் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். சகல காரியங்களும் தவக்கத்தோடு நடக்கும். வரவு செலவு சமனாகும். ஈதிபாதைகள் அதிகமாகும். அடிக்கடி சரீரத்தில் உபாதி உண்டாகி விலகும். தெய்வபலம் காக்கும். ஸ்வய விருத்திகளில் மனம் நிம்மதி இல்லாமல் இருக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் பெரிய காரியங்களைச் செய்து முடித்து கீர்த்திபத்திரங்கள் கிடைக்கும். சஸ்ய தான்ய விருத்திகள் ஏற்படும். விவசாயம் ஓங்கும். நல்ல லாபம் கிடைக்கும். நூதன கிரக பூமி லாபங்களும் வியவகாரத்தில் வெற்றியும், ஏற்படும். குடும்பத்தொல்லை இருந்துகொண்டே இருக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் திருப்தியான பலனைத்தராது. சதா சிந்தனையாகவே இருந்துகொண்டு இருக்கும். நல்ல புத்தியும் சேர்க்கையும் இருக்காது. வீண் செலவுகளும் அவமதிப்பும் ஏற்படும். தெய்வபலம்தான் காக்கவேண்டும். சதா தெய்வ சிந்தனையாகவே இருந்தால் ஒருவாறு சாந்தி உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அடிக்கடி சஞ்சாரங்களும் அதிக விரயங்களும் சஸ்ய தான்ய விருத்தி காரியங்களில் கொஞ்சம் கவலைகளையும் ஆரோக்கியக் குறைவையும் உண்டுபண்ணும். தெய்வபலம் முன்னின்று சகலத்தையும் ஜெயிக்கும். உலக பிரசித்தியும் ஏற்படும். சதா தெய்வ சிந்தனையாகவே இருக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வரவு செலவு சமனாகும். பெரிய தெய்வீக காரியங்களில் ஈடுபட்டு நிர்விக்னமாய் நடத்தி தெய்வ பலத்தை பிரகாசப்படுத்தும். குடும்பத் தொல்லைகளும் சமான ஜன பீடைகளும் இருந்து கொண்டே இருக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும். ஜீவன விருத்தி, குடும்பசுகம், வித்தியா விருத்தி, மேலோர் பெரியோர்களின் செயற்கை. அசாத்திய காரியங்கள் எல்லாம் சுலபமாக சாதிக்கும் தன்மை எல்லாவற்றையும் தரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனூர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். கிரய விக்கிரயங்களும் நஷ்டதன பிராப்தியும் ஜீவன லாபமும், உத்தியோகத்தில் ஸ்திர சுகவாசமும் நூதன பிரபு தரிசனமும் கீர்த்தி பத்திரமும் வியவகார வெற்றியும் ஏற்படச்செய்யும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். இடம் மாறி ஜீவன சுகம் உண்டுபண்ணும். வெகு நாட்களாக நிவர்த்தி ஆகாத வியாதி நீங்கும். வரவு செலவு சமனாகும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகலமும் சாத்யமாகும் சதா தெய்வ சிந்தனையினால் எல்லாக் காரியமும் நடக்கும். திங்கள், சுபமாகும்.

11. கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் சுபமேயாகும். வம்சவிருத்தி ஏற்படும். ஆரோக்யம் உண்டுபண்ணும் இல்லற சுகமும் குடும்ப சுகமும் ஓங்கும். நூதன வஸ்திராபணச் சேர்க்கையும் மேலோர் பெரியோர்களுடைய அன்பும தனதான்ய பெருக்கும் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். சதா அலைச்சலை உண்டுபண்ணும். விவசாயங்களில் தொல்லைகளைக் காட்டும். சகல காரியங்களும் விக்னத்தோடு நடக்கும். செலவினங்கள் அதிகமாகும். சமான ஜன பீடையும் குடும்பத் தொல்லைகளும் இருந்துகொண்டே இருக்கும். குலதெய்வத்தால் குடும்பம் ரக்ஷிக்கப்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி கார்த்திகை குரு, சனி, செவ்வாய் மூவரும் ஒருவருக்கொருவர் ஷஷ்டாஷ்டக ராசிகளில் சிம்மம், மகரம், மீனம் இந்த ராசிகளில் இருந்துகொண்டு சஞ்சாரம் செய்வதால் பிரபஞ்சவர்த்தமானங்கள் ஒன்றும் சரியாக நடைபெறுமலும் சஸ்ய தான்ய விருத்திகளிலும் இயற்கைகள் ஏற்பட வேண்டியவைகளிலும் ஒன்றும் சரியாய் இல்லாமலும், இருந்து ஒவ்வொருவரும் அவரவர்கள் அநேகம் இடையூறுகளையும் ஆங்காங்கு கலகங்களையும் உண்டு பண்ணிக்கொண்டு இருப்பார்கள். தெய்வம் ஒதுங்கி நிற்கும். ஆகையால் பெரியோர்கள், மேலோர்கள் ஞானிகள், குருமார்கள், எல்லோரும் முன்னின்று கொண்டு உலக க்ஷேமத்துக்கு ஒரு விநாடிகூட வீண்செய்யாமல் சதா தெய்வ பலத்தையே சேகரித்துக்கொண்டு வர உத்பாதங்கள் எல்லாம் மாறி உலகம் பூராவும் சுபிக்ஷத்தையும் சுகத்தையும் அடையும். சுபம் உண்டாகும்.

Vol. 26 - No 11/12

தருமபுர ஆதீனம் வேளூர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி
தேவஸ்தானச் சார்பில், நடைபெறுகின்ற
இலவச சித்தவைத்தியசாலையை,



தமிழக அரசு. கல்வி. தொழில் அறநிலைய அமைச்சர்,
மாண்புமிகு, திரு. இரா. நெடுஞ்செழியன் M. A.
அவர்கள் பார்வையிடுதல்.

வேளூர், தேவஸ்தானம் வழிபடுவோர் விடுதி :

தமிழக அரசு அமைச்சர்
மாண்புமிகு, திரு. இரா. நெடுஞ்செழியன் M.A. அவர்கள்
திறந்துவைத்தல்.

Printed & Published by. K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram) 10—11—67.